Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 மாசி-15 27-02-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை -09


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
T.P: 024-222 4247 (சி-11252)

# நலன்புரி நிலையங்களில் படையினர் தங்கியிருப்பதற்கு புலிகள் ஆட்சேபம்!

## அம்பாறையில் எரிக் சூல் ஹெய்மிடம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**சுனாமி அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களிலும் இடைத்தங்கல் முகாம்களிலும் சிறிலங்காப் படையினர் நிலை கொண்டிருப்பது குறித்து விடுதலைப்புலிகளினால் நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்மிடம் சுட்டிக்காட்டப்பட்டது.**

நேற்று அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகர் எரிக் சூல்ஹெய்முடன் நடைபெற்ற சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளனர். நிவாரணப்பணிகள் சிறிலங்கா சனாதிபதியினால் இராணுவ அதிகாரிகளின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பது சிறிலங்காப்படையினரின் தலையீட்டிற்கு வழிவகுத்துள்ளது. இதனால் நிவாரணப்பணியாளர்களும, தொண்டர் அமைப்புகளும் இடையூறுகளைச் சந்திக்க வேண்டியிருக்கின்றது. அது மட்டுமன்றி சில சந்தர்ப்பங்களில் எமது போராளிகளும் இடையூறுகளைச் சந்திக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)



## சனாதிபதியை விமர்சிப்பதை நிறுத்தும் வரை ஜே.வி.பி யுடன் பேச்சுவார்த்தை இல்லை

### சனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர்களும் அதன் ஆதரவாளர்களும் தொடர்ந்து அரசாங்கத்தையும், சனாதிபதியையும் விமர்சனம் செய்வதை நிறுத்தும்வரை அவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படமாட்டாது என்று சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அரசு மேற்கொள்ளும் சமாதானப் பேச்சுவார்தைகளை விமர்சிப்பதை ஜே.வி.பி. நிறுத்தவேண்டும். என்பதோடு, ஜே.வி.பி அமைச்சர்கள் வேண்டுமென்றே அமைச்சரவை விதிமுறைகளை மீறி வருவதாகவும், சனாதிபதி விசனம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சனாதிபதியும், விடுதலைப்புலிகளும் வடக்கு கிழக்கில் கூட்டாக புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுவது தொடர்பாக சனாதிபதியின் நிலைப்பாட்டை ஜே.வி.பி. விமர்சித்திருப்பதானது சனதிபதியின் கடும் சீற்றத்தைத் தூண்டியுள்ளது.

சனாதிபதி சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவியை வகிக்கின்றாரே ஒழிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியை வகிக்கவில்லை என்பதையும் ஜே.வி.பி யினருக்கு நினைவூட்டுகிறோம் என சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வாகரையில் திறப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரை என்னும் இடத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியொன்று நாளை திறந்து வைக்கப்படவுள்ளது. வாகரைப் பிரதேச மக்களின் குறிப்பாக, சமூகப் பொருளாதாரரீதியாக மிகவும் பின்தங்கியநிலையில் வாழ்ந்துவருகின்ற மக்களின் சுய பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற்கொண்டே இவ்வங்கி

(14ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத முறையில் மீன்பிடியில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை!

### -தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதி சூசை தெரிவிப்பு

சட்டவிரோத மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்தார். நேற்று விடத்தல்தீவில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மன்னார் மாவட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் விடத்தல்தீவு அ.த.க. பாடசாலையில் கடல்வளம் பாதுகாத்தல் தொடர்பான கூட்டமொன்று இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள், மன்னார் ஆயர், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், மன்னார் மாவட்ட மீன்பிடிச் சங்கங்களின் முக்கிய பிரதிநிதிகள், அரச, அரச சார்பற்ற பிரதிநிதிகள் எனப் பெருமளவானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான இந்திய தூதுவர் மந்திகை மருத்துவமனைக்கு விஜயம்

(பருத்தித்துறை)

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திருமதி. நிருபமாராவ் நேற்று வடமராட்சி பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத்தூதுவர் நிருபமாராவ் அடங்கிய ஆறு பேர் கொண்ட குழுவினர் விமானமூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து விமானப்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் வடமராட்சி பிரிகேடியர் தளத்தை வந்தடைந்தனர். அங்கிருந்து சிறிலங்கா இராணுவப் பாதுகாப்புடன் வாகன அணியாக பருத்தித்துறை, மந்திகை அரசினர் வைத்தியசாலையை காலை 10.45 மணியளவில் வந்தடைந்தனர்.

இவ்வாறு வந்தடைந்த நிருபமாராவ் குழுவினரை மந்திகை வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி கதிரவேற்பிள்ளை அவர்கள் வரவேற்று அழைத்துச் சென்றார். அங்கு வைத்தியசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.பூநொச்சி முனை முஸ்லிம் கிராமத்தில் தற்காலிக குடியிருப்பு திறப்பு விழா

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக தறகாலிகக் குடிமனைகளை அமைககும் வேலைத் திட்டச் செயற்பாடுகளில் தொடர்ந்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டு வருகின்றது அந்தவகையில் மற்றுமொரு குடியிருப்பினை பூநொச்சி முனை முஸ்லிம் கிராமத்தில் நேற்று முன்தினம் 2.00 மணியளவில் திறந்து வைத்துள்ளது. 75 வீடுகளைக் கொண்ட இக்குடியிருப்பு திறப்புவிழாவானது மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளரான எம்.வை. ஆதம்லெப்பை அவர்கள் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக மண்முனை வடக்கு என் சங்கர், மட்டக்களப்பு மாவட்ட பள்ளிவாசல்கள் , முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் ஏ.எல். அத்துல் ஜஹத்; மாவட்டப் பணிப்பாளர் கே. தேவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதனையடுத்து தற்காலிக குடிமனைகளில் முதலாவது குடிமனையை பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட என். சங்கர் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். இதனைத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### -இந்தியத் தூதுவர் வருகை குறித்து-

## செய்தி சேகரிக்கச் சென்ற இருவர் மீது ராணுவத்தினர் தாக்குதல்

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் மந்திகை வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த வேளை செய்திகளை சேகரிக்க சென்ற பத்திரிகையாளர் இருவர் இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த இருவரால் தாக்கப்பட்டதுடன் மிரட்டி வெளியேற்றியுமுள்ளனர்.

செய்திகளை சேகரிக்க இவர்கள் வைத்தியசாலை வளாகத்துள் சென்ற போது (சிவில் ) சாதாரண உடையில் சென்ற சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்கள் மேற்படி பத்திரிகையாளர் இருவரையும் தோள் பகுதியில் தாக்கியதுட.ன் மிரட்டி வெளியேற்றியுள்ளனர்.

தாம் பத்திரிகையாளர் எனத் தம்மை அடையாளப்படுத்தியும் இராணுவப் புலனாய்வாளர்கள் ஏற்க மறுத்ததோடு இருவரும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி மிரட்டி வைத்தியசாலை வளாகத்தை விட்டு வெளியேற்றியுள்ளனர். (கா)



# கண்ணீர் அஞ்சலி

நாட்டுப்பற்றாளர்

வே.க.ஏரம்பு

எம்மக்களையும் எமது தேசத்தையும் நன்கு நேசித்து வந்த எமது ஆசிரியப் பெருந்தகை எமது மக்களையும் அவர்களுடைய குடும்பத்தினர் உற்றார், உறவினர்களையும் விட்டு சிவபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத் துயரில் மூழ்கியுள்ளோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.


வணிகர் கழகம்,
புதுக்குடியிருப்பு, முல்லை.

(சி-11509)

# கண்ணீர் அஞ்சலி

நாட்டுப்பற்றாளர்

வே.க.ஏரம்பு




இந்த மண்ணின் மக்களையும், மண்ணையும் நன்கு நேசித்த பண்பாளரும், விடுதலைபெற அயராது உழைத்த நாட்டுப்பற்றாளருமான வே.க. ஏரம்பு அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

தகவல்:-
முச்சக்கர ஊர்திச்சங்கம்
புதுக்குடியிருப்பு.

(5698)

# தாங்கும் வேரின்றிப் போனோம்!



கூரம்பு நெஞ்சிற்
குத்தும் வலியறிந்தோம்
ஏரம்பு அய்யா
எமைவிடுத்துப் போயினதால்
நீரின்றிக் காயும்
நிலமானோம் தாங்கும்
வேரின்றிப் போனோம்
விழிகள் மயங்குகிறோம்.

பேரின்றிப் போமோ
புனல்குடித்த தமிழென்று
வீறின்றிப் புண்ணாய்
விழுந்தார் தமையணைத்து
போரொன்றிச் செய்வோம்
புதுக்கிடுவோம் வாவென்று
சூளொன்று செய்தான்
சீர்விழிகள் மூடினவோ?

நெற்றியிலே ஞான
நெகிழ்வரிகள் சாற்று
வெற்றிலையிற் செம்மை
வார்த்தையிலே தமிழ்ச்செழுமை
வெற்றியெனச் சொல்லும்
வழிச்சுடரில் வேதங்கள்
கற்றிருந்தோம் காலம்
கழிக்கக் கழிந்தனனே.

அண்டிவரும் யாரும்
அருந்திடத்தேன் தமிழ்ப்பாலை
மொண்டுதரும் மேன்மை
மொழியான் புதுப்பார்வை
கண்டுதரும் காதற்
சூரியன் மொழித்தகைமைப்
பண்டிதனோ காலம்
படுக்கப் படுத்தயர்ந்தான்.

குலையா நகையன்பைக்
குழைத்துத் தரும் பேச்சு
அலையா நடைசற்றும்
அதிராத தமிழ்க்காதல்
வளையாத் தமிழீழ
வரிப்புலியின் திருமாமன்
நிலையாவான் நெஞ்சில்
நீடுநெடு நீசூழி

நாட்டுப்பற்றாளர்
வே.க.ஏரம்பு



தகவல்:-
தமிழீழக் கல்விக்கழகம்
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை

(சி.11510)

# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி

1.யுனிசெப் திட்டத்தின் கீழ் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பின் வரும் பாடசாலைகள், தற்காலிக வகுப்பறைகள் அமைத்தல் தொடர்பான கேள்விகள் கேள்விச் சபைத் தலைவரும் வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய என்னால் 25.02.2005 ஆம் திகதி தொடக்கம் 2005.03.03 ஆம் திகதி பி.ப 3.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித்திகதிக்கு அடுத்த நாள் 04.03.2005 ஆம் திகதி மு.ப 10.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலையின் பெயர் | தற்காலிக வகுப்பறை அமைத்தல் | | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் Rs | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | | ICTAD |
|---|---|---|---|---|---|---|
| | பொதி 1 வகுப்பறைகளின் எண்ணிக்கை | பொதி 2 வகுப்பறைகளின் எண்ணிக்கை | | பொதி1 Rs | பொதி2 Rs | |
| 1.யா.ஆழியவளை சீசீதக | 03 | 14 | 250 | 5000 | 10000 | M9 & M8 |
| 2.யா.வெற்றிலைக்கேணிபரமே | 03 | 11 | 250 | 5000 | 12000 | M9 & M8 |
| 3.யா.வெற்றிலைக்கேணி றோ.க.த.க.பா | 01 | 02 | 250 | 2000 | 2250 | M9 |
| 4.யா.கட்டைக்காடு றோ.க.த.க.பா | 02 | 05 | 250 | 4000 | 5500 | M9 |
| 5.கேவில அ.த.க.பா | 02 | 05 | 250 | 4000 | 5500 | M9 |
| 6.யா.மாமுனை அ.த.க.பா | 01 | 03 | 250 | 2000 | 3500 | M9 |
| 7.யா.செம்பியன்பற்று றோ.க.த.க.பா | 01 | 03 | 250 | 2000 | 3500 | M9 |
| 8.யா.தாழையடி றோ.க.த.க.பா | 02 | 05 | 250 | 4000 | 5500 | M9 |
| 9.யா.மணற்காடு றோ.க.த.க.பா | 03 | 09 | 250 | 5000 | 10000 | M9& M |
| 10.யா.வல்வை சிவகுருவித்தி | 04 | 15 | 250 | 5750 | 16500 | M9& M8 |
| 11.யா.வடஇந்து மகளிர் கல் | 01 | 04 | 250 | 2000 | 4500 | M9 |
| 12.யா.தம்பசிட்டிமெமித.க.பா | 01 | 04 | 250 | 2000 | 4500 | M9 |
| 13.யா.அல்வாய்வடமெமித.க | 01 | 04 | 250 | 2000 | 4500 | M9 |

02.மேற்படி வேலைகளுக்கமைவாக கேள்விப்பத்திரப் பணத்தை தங்களுக்கு வசதியான வங்கியிலிட்டு வலயக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி என்ற பெயரில் வங்கிக் கட்டளையைப் பெற்று (Pay Order) வடமராட்சி வலயப்பாடசாலைகள் வேலைகள் கிளையில் சமர்ப்பித்து 2005.02.25 ஆம் திகதி தொடக்கம் 2005.03.03 ஆம் திகதி பி.ப 3.30 மணி வரை கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03.மேற்படி வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும், இணைப்பிரதியும் தனித்தனிக் கடித உறையில் இடப்பட்டு உறைகளின் இடது பக்க மேற்பக்கத்தில் வேலையின் விபரம் எழுதப்படவேண்டும். தனித்தனியாக உறைகளிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் இரண்டையும் பிறிதொரு உறையில் இட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரே முத்திரையிட்டு வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம் என்ற முகவரி இட்டு, வலயக்கல்வி அலுவலகத்தில் வலயக்கல்விப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் 03.09.2005 ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

04. கேள்விச்சபையால் தெரிவு செய்யப்படும் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப் பட்ட திகதியில் இருந்து இரண்டு வேலை நாட்களுக்குள் கேள்விச் சபைத் தலைவருடன் வேலைக்கான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டு உரிய காலத்தில் வேலையைப் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எவ்வித காலதாமதமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

05.கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன், இவ்வேலை தொடர்பான மேலதிக விபரங்களை வடமராட்சி வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் என அறியத்தருகின்றோம்.

*பாடசாலை வேலைகள் கிளை*
*வலயக்கல்வி அலுவலகம்*
*வடமராட்சி.*

வே.தி.செல்வரத்தினம்,
கேள்விச்சபைத் தலைவரும்,
வலயக்கல்விப் பணிப்பாளரும்,
வடமராட்சி.

(சி.11516)

# டெல்அவிவில் தற்கொலைத்தாக்கு; 4 பேர் பலி; 50 பேருக்கு மேல் காயம்


## –தலைநகர்– களியாட்ட விடுதியில் சம்பவம்

**இஸ்ரேலின் தலைநகர் டெல்அவிவில் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன் ஐம்பதிற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.**

களியாட்ட விடுதியில் நிகழ்ச்சியைப் பார்வையிட வந்திருந்த மக்கள் வெளியே நின்று கொண்டிருந்த வேளை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதற்கு இஸ்லாமிய ஜிகாத் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப் பேற்றுள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையே நீண்ட நாட்களாக மோதல் நடைபெற்று வருகிறது. பலஸ்தீனத்தின் காஸா, மேற்கு கரைப் பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக பலஸ்தீன தற்கொலைப் படை தீவிரவாதிகள் இஸ்ரேலில் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத் மரணமடைந்த பி[illegible]ர்பு இரு தரப்புக்குமிடையே சமரச முயற்சிகள் நடந்தன. இதன் ஒரு பகுதியாக இஸ்ரேல் இராணுவம் வாபஸ் பெறத் தொடங்கியது. இஸ்ரேல் சிறையில் இருந்து பலஸ்தீனக் கைதிகளும் படிப்படியாக விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். ஆனால் இந்தச் சமரச முயற்சியில் இப்போது திடீர் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. இதே வேளையில் இத் தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் கருத்துத் தெரிவிக்கையில், தற்கொலைப் படையினரின் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதில் பலஸ்தீன அமைப்புத் தோல்வி அடைந்து விட்டதெனக் கூறியுள்ளது. இத் தாக்குதலைக் கண்டித்துள்ள பலஸ் தீன அரசு தீவிரவாதிகள் சீர் குலைவு நடவடிக்கையில் ஈடு பட்டாலும் அமைதிப் பேச்சுக்கள் தொடரும் என்று கூறியுள்ளது.



சேதமடைந்த களியாட்ட விடுதியின் ஒரு பகுதி




பாக்தாத் விமான நிலைய வீதியில் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்தினை தனது டாங்கியில் இருந்து அமெரிக்கப் படையினர் ஒருவர் பார்வையிடுகிறார்.

## சீனாவில் பேருந்து விபத்துகளில் 27 பேர் பலி; 49 பேர் காயம்

(பீஜிங்)

சீனாவில் இடம் பெற்ற இரண்டு பேருந்து விபத்துக்களில் 27 பேர் உயிரிழந்துள்ளதுடன் 50 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவங்கள் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சீனாவில் தெற்கு குவாங்கோ மகாணத்தில் அளவுக்கதிகமாக பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து பள்ளத்தில் வீழ்ந்ததில் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 30 பேர் காயமடைந்தனர். இவர்களின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதேவேளை மற்றுமொரு பேருந்து விபத்து மேற்கு மாகாணத்தில் இடம்பெற்றது. பேருந்து ஒன்று வான் ஒன்றுடன் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதன் போது 11 பேர் உயிரிழந்துள்ளதுடன் 19 பேர் காயமடைந்துள்ளனர்.

## கொங்கோவில் குண்டுத் தாக்கு; ஒன்பது அமைதிப் படை பலி!

கொங்கோவில் ஐ.நா. அமைதிப் படையினர் மீதான குண்டுத்தாக்கு தலில் ஒன்பது ஐ.நா. அமைதிப்படையினர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை கபே பட்டணத்திற்கு அண்மையாக இடம்பெற்றுள்ளது.

இதுதொடர்பாக ஐ.நா. பேச்சாளர் ஒருவர் தெரிவிக் கையில், ஐ.நா. படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளையில் இனந்தெரியாத ஒருவரினால் குண்டு வெடிக்க வைக்கப்பட்ட தாகத் தெரிவித்தார்.

இச்சம்பவம்தொடர்பாக பங்களாதேஷ் இராணுவத்தினர் வெளியிட்ட அறிக்கையில்; ஒன்பது இராணுவத்தினர் கொல்லப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டதுடன், இவர்களின் சடலங்கள் ஐ.நாவின் உதவியுடன் பங்களாதேஷிற்கு கொண்டு வரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈராக் தீவிரவாதக்குழுவின் உதவியாளர் அபுகுதாப் கைது

(பாக்தாத்)

ஈராக் தீவிரவாதக் குழுவின் முக் கிய தலைவரும் சர்காவியின் உதவி யாளருமான அபுகுதாப் ஈராக்பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் சர்காவியின் கார்ச் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

ஈராக்கில் மறுசீரமைப்பு பணிகளில் ஈடு பட்டுவரும் அமெரிக்கபடையினர் மீதும் ஏனைய நாட்டு ஊழியர்கள் மீதும் தீவிரவாதிகள் திடீர்த் தாக்குதல் நடத்தி வருகின்றார்கள். வெளி நாட்டவர்களைப் பணயக் கைதிக ளாக இவர்கள் கடத்திச் செல்கி றார்கள் அபுகுதாப் அல் சர்காவி தலைமையில் பல்வேறு பிரிவுகளாக இந்தத் தீவிரவாதக் குழு இயங்கி வருகிறது.

இவர்களது கைதினைத் தொடர்ந்து சர்காவியும் விரைவில் கைது செய்யப்படுவார் என்று அமெரிக்கப் படையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இவர் தொடர்பான தகவலை வழங்குவோருக்கு இரண்டு கோடி ரூபா பரிசு வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## டைனோசர் எலும்புகளை ஏலம் விட்டவர் கைது

(பாங்கொங்)

இணையத் தளம் மூலம் டைனோசர் எலும்புகளை ஏலம் விட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார். சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்து அழிந்து போன பிரமாண்ட மிருகமான டைனோசர் எலும்புகளின் மக்கிப் போன படிமங்கள், பழமை காரணமாக மதிப்பு வாய்ந்தவை ஆகும். அவற்றை இணையத்தளம் மூலம் ஏலத்தில் விட்ட வட்சாவித்பன் என்பவரே கைதானவராவார் இவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த வர்த்தகப் பிரமுகர் எனத் தெரிய வருகின்றது.

1976 ஆம் ஆண்டு ஒரு கிராமத்தில் 30 பெரிய டைனோசர் படிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றை கொஞ்சம் கொஞ்சமாக ஏலம் விட்டுள்ளார். அவை ஐம்பது ஆயிரம் முதல் ஒரு லட்சம் ரூபா வரை ஏலம் விடப்பட்டன.

இவர் டைனோசர் எலும்புகளை இங்கிலாந்து, கனடா, ஹொங் கொங், சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு விற்றார். அவ்வாறே அமெரிக்காவுக்கு விற்றபோது பிடிபட்டார்.

## தாக்குதலுக்கு பொறுப்பானவர்களை பலஸ்தீனம் கண்டு பிடிக்க வேண்டும்

### –அமெரிக்க வெளிவிவகார அமைச்சர்

(வோஷிங்டன்)

இஸ்ரேலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டு பிடிக்குமாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்ட லினாரைஸ் பலஸ்தீன தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பயங்கரவாதத்தை பார்த்துக் கொண்டு வாளாதிருக்க முடியாதென அவர் எச்சரித்துள்ளார். மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அழுத்தம் கொடுக்கும்




முகமாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இஸ்ரேலின் மேற்குக் கரையான கரையோரப் பகுதிக்கு வி[illegible]ம் செய்து இரண்டரை மணித்தியாலங்களுக்குப் பின்னர் இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பலஸ்தீனர் ஐவர் கைது

(இஸ்ரேல்)

டெல் அவிவ்வில் நேற்று இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக ஐந்து பலஸ்தீனர்கள் இஸ்ரேலியப் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.

இந்த நிலையிலேயே தற்கொலைத் தாக்குதலில் பங்கேற்றவரின் சகோதரர்கள் இருவர் உட்பட ஐவர் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.



பாக்தாத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த பகுதிக்கு அண்மையாக உள்ள சுனி முஸ்லிம்களின் பள்ளி வாசலிற்கு மேலாகப் பறந்து செல்லும் அமெரிக்க உலங்கு வானூர்தியையும் அமெரிக்க டாங்கி ஒன்று பள்ளி வாசலுக்கு முன்னால் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மலேசியாவில் காட்டுத் தீ; 21300 ஏக்கர் கருகி நாசம்!

மலேசியாவில் காட்டுத் தீயினால் ஆறு மாநிலங்களில் 21300 ஏக்கர் வனப் பகுதி கருகி நாசமாகியுள்ளது.

இங்கு கடும் வெப்பநிலை பரவி வருவதுடன், பலத்த காற்றும் வீசுகின்றது. அங்குள்ள காட்டுப் பகுதியில் திடீரென தீப் பிடித்துக் கொண்டது.

நூற்றுக்கணக்கான தீயணைப்பு வண்டிகள் தீயை அணைக்கப் போராடிவருகின்றன.

இருந்த போதிலும் காற்று வேகமாக வீசுவதால் தீ வேகமாகப் பரவி வருகிறது.

# மோட்டார் சைக்கிள் சாரதிகள் வீதி விதிமுறைகளை கடைப்பிடித்து நடந்தால் விபத்துக்களைத் தவிர்க்கலாம்

-தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவு வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

**வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு மோட்டார் சைக்கிள் சாரதிகள் வீதி விதிமுறைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் மோட்டார் சைக்கிள் சாரதிகளுக்கான வேண்டுகோள்களை விடுத்துள்ளனர்.**

அண்மைக்காலத்தில் எமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் கூடுதலான விபத்துக்கள் மோட்டார் சைக்கிள் சாரதிகளின் கவலையீனத்தாலும்; வேகத்தினாலும் வீதிகள் அகலம் குறைவின் காரணத்தாலும் நடைபெற்று வருகின்றன. இவ் விபத்துக்கள் நடப்பதற்கு காரணம் மோட்டார் சைக்கிள் சாரதிகள் வீதியின் விதிமுறைகளைப் பின்பற்றாது மோட்டார் சைக்கிள் சாரத்தியம் செய்வதே. இவ் விபத்துகளைத் தடுப்பதற்கு மோட்டார் சைக்கிள் சாரதிகளாகிய நீங்கள் வீதியின் விதிமுறைகளைக் கடைப் பிடித்து நடக்கவேண்டும்.

வீதியின் விதிமுறையெனக் கூறும் போது மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது வீதியின் இடதுபக்கமாகச் செலுத்துதல் வேண்டும. ஒரு வாகனத்தை முந்திச் செல்லும் போது வலது பக்கமாக முந்திச் செல்லுதல் வேண்டும். இதே போன்று இடது பக்கமாக மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தாங்கள் வீதியின் தார் விளிம்பில் இருந்து மூன்று அடிக்குள் செலுத்துதல் வேண்டும். வீதியில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தும் போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும் .மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும் போது ஓடிக்கொண்டிருக்கும் இன்னொரு மோட்டார் சைக்கிளில் பிடித்துக் கொண்டு செல்லுதல் தவிர்க்க வேண்டும்.

நீங்கள் வீதியில் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது பின்னால் வரும் வாகனங்களுக்கு வழிவிடாது நடுவீதியால் செல்வதைத் தவிர்க்கவேண்டும். உங்களுக்கு முன்னால் செல்லும் வாகனங்களை சந்திகளில் பாதசாரி கடவைகளில் வளைவு நெளிவான இடங் களில் முந்திச்செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். நீங்கள் மோட்டார் சைக்கிளில் கிளைவீதியிலிருந்து பிரதான வீதிக்கு நுழையும் போது மோட்டார் சைக்கிளை கிளைவீதியில் நிறுத்தி பிரதான வீதியின் வலது பக்கமும் பார்த்து பின் இடது பக்கமும் பார்த்து திருப்பவும் வலது பக்கம் பார்த்து வலது பக்கங்களிலிருந்து வரும் வாகனங்களையும், இடது பக்கங்களிருந்து இருந்து வரும் வாகனங்களையும் செல்ல அனுமதித்த பின் மோட்டார் சைக்கிளை பிரதான வீதிக்குள் இடையூறு இன்றி வீதியின் விதிமுறைகளுக்கேற்ப செலுத்துதல் வேண்டும் நீங்கள் மோட்டார் சைக்கிளில் பிரதான வீதியால் சென்று கிளை வீதிக்கோ அல்லது கிளைவீதியிலிருந்து பிரதான வீதிக்கோ செல்லும் போது திசைக்கேற்ப நூறு அடிக்கு முன் சைகையை (லைற்சைகை,கைச்சைகை )தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது முன்பக்கத்தில் வெள்ளை நிற (முகப்பு வெளிச்சம் )வெளிச்சத்தையும் பின்பகத்தில் சிவப்புநிற வெளிச்சத்தையும் அல்லது சிவப்பு நிற தெறிகல்லையும் பாவித்தல் வேண்டும். வெளிச்சமின்றி செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது முறையான கட்டுப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் பொருட்களை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும். மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் அதற்கு மேற்பட்டோரை ஏற்றிச் செல்வதைத் தவிர்த்தல் வேண்டும் . மோட்டார் சைக்கிள் செலுத்தும் போது வீதியில் தேவையற்ற பொருட்கள் மீது தாங்கள் பார்வையை செலுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது மென்நிற ஆடை அணிந்திருத்தல் வேண்டும். மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும் போது வீதியில் பணிக்கப்பட்ட வேகத்தை கடைப்பிடித்துச் செலுத்துதல் வேண்டும்.

நீங்கள் பிரதான வீதியில் இருந்து இடது பக்கம் அல்லது வலது பக்கம் வரும் வீதிக்கு திரும்புவதாக இருந்தால் உங்களுடைய மோட்டா சைக்கிளுக்கு பின்னால் வரும் வாகனங்கள் நேராக செல்லுமானால் அதற்கு வழிவிடவேண்டும் . மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தும் போது மது போதையில் செலுத்துவைத் தவிர்த்தல் வேண்டும்.

வீதியில் மோட்டார் சைக்கிளை செலுத்துவதற்கு முன் மோட்டார் சைக்கிளின் பொறிமுறைகள், விளக்குகள், டயர், தடுப்புக்கள், ஒலிக்கருவிகள், என்பன சரியான முறையில் உள்ளதா என உறுதிப்படுத்துங்கள். இவற்றைக் கடைப்பிடித்து வீதி விபத்திலிருந்து உயிர் இழப்புக்களையும் உடமை இழப்புக்களையும் தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (சோ)

## தமிழீழ நுண்கலைக்கல்லூரியின் ஓவியப்போட்டிப் பரீட்சை

(புதுக்குடியிருப்பு)

தமிழீழ நுண்கலைக்கல்லூரியால் நடாத்தப்பட இருக்கும் மாபெரும் ஓவியப் போட்டிப்பரீட்சை இன்று புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியில் காலை 10.00 மணிக்கும், அடுத்த மாதம் ஆறாம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலையில் (யாழ். வலயக்கல்விப் பணிமனைக்கு அருகாமை யில்) காலை 10 மணிக்கும் அடுத்த மாதம் 8 ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியால யத்தில் காலை 10 மணிக்கும் நடைபெறவுள் ளன.

மேற்படி போட்டிக்கென விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை கிடைக்காதவர்களும் அந்தந்த குறிப்பிடப்பட்ட போட்டி நிலையங்களில் போட்டிக்கான ஆயத்தங்களுடன் பங்குபற்றலாம். எனவும் முல்லை.மாவட்ட நுண்கலைக்கல்லூரி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (08)




**முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் எக்கோ,கெயார் நிதி உதவியுடன் முறிப்பு, பூதன்வயல் கிராம மக்களில் 12 பயனாளிகளுக்கு நன்னீர் மீன்பிடி உபகரணங்களை அண்மையில் வழங்கியது.**

**மு.பொ.அ.நிறுவன இணைப்பாளர் சுரேஸ் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் குமாரபுரம் கிராம அலுவலர் சௌந்தரநாயகம், நிறுவன நிர்வாக அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்.சகிலா)**

## வீதி ஒழுங்கு கருத்தூட்டல் மார்ச் 6ஆம் திகதிக்கு பிற்போடல்

(அலுவலக செய்தியாளர்)

இன்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டம் மற்றும் வவுனியா வடக்கு பகுதிகளில் நடைபெறவிருந்த உந்துருளி ஓட்டுனர்களுக்கான வீதி ஒழுங்கு கருத்தூட்டல நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வு எதிர்வரும் ஆறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏற்கனவே அறியத்தரப்பட்டுள்ள இடங்களில் குறித்த நேரத்திற்கு நடை பெறுமெனவும் தமிழீழ காவல் துறையின முல்லை மாவட்ட கண்காணிப்பாளர் தெரிவித் துள்ளார் (சோ)

## விசுவமடு இளங்கோபுரத்தில் நியாப் வேலைத்திட்ட ஒன்றுகூடல்

(உடையார்கட்டு)

விசுவமடு இளங்கோபுரம் பொது மண்டபத்தில் நியாப் II வேலைத் திட்டம் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தலைமையில் அறிமுக ஒன்றுகூடல் இடம்பெற்றது. நியாப்-II வேலைத் திட்டம் மூலம் குளம் அமைத்தல், வீதிபுனரமைப்பு, பொதுக் கிணறு அமைத்தல், ஜீவனோபாய ஆதாரச் செயற்றிட்டத்திற்குக் கடனுதவி வழங்குவதற்கான நிதி வழங்கல் என்பன செயற்படுத்தப்படவுள்ளன.இந்நிகழ்வில் விசுவமடு பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள் உட்பட பலர் பங்கேற்று கருத்துக்களை வழங்கினர். (19)

## விசேட கண்சிகிச்சை, சத்திரசிகிச்சைக்கு பதிவு செய்து பயன்பெற அழைப்பு

(அலுவலக செய்தியாளர்)

இங்கிலாந்திலிருந்து வருகை தரும் விசேட கண்சிகிச்சை மருத்துவக்குழு, யாழ் போதனா வைத்தியசாலையின் கண்சத்திரசிகிச்சை நிபுணருடன் இணைந்து கண் நோய்களுக்கான சிகிச்சை, கண்ணில் பூவிழுதல் (கற்றாக்) மற்றும் வேறு கண் நோய்களுக்கான சத்திர சிகிச்சை போன்றவற்றை மார்ச் 14ஆம் திகதியிலிருந்து 23 ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் உள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே இச்சிகிச்சையில் பயன் பெறவிரும்புவோர் கீழ்வரும் திகதிகளில் தங்கள் அருகிலுள்ள திலீபன் மருத்துவசேவை நிலையத்திலும், டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனையிலும் காலை 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையிலும் சென்று பரிசோதனைக்குட்படுத்தி பதிவுசெய்யுமாறு தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் வேண்டியுள்ளனர்.

நாளை பிரமந்தனாறு திலீபன் மருத்துவமனை, நாளை மறுதினம் அளம்பில் திலீபன் மருத்துவமனை, 2ஆம் திகதி மாங்குளம் திலீபன் மருத்துவமனை, 03ஆம் திகதி கிளி.டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனை, 04ஆம் திகதி கற்சிலைமடு திலீபன் மருத்துவமனை, 05ஆம் திகதி ஆழியவளை திலீபன் மருத்துவ மனை, 08ஆம் திகதி புதுக்குடியிருப்பு. டாக்டர் பொன்னம்பலம் மருத்துவமனை, 07.ஆம் திகதி புளியங்குளம் திலீபன் மருத்துவமனை, 09.ஆம் திகதி கறுக்காய்க்குளம் திலீபன் மருத்துவமனை, 10.ஆம் திகதி - ஐயன் குளம் திலீபன் மருத்துவமனை, 11ஆம் திகதி பூநகரி திலீபன் மருத்துவமனை, (சோ)

## சுனாமியால் பாதிப்புற்ற உ/த மாணவருக்கு மேலதிக வகுப்புக்கள் ஆரம்பம்

மேற்படி வகுப்பானது உலக கனேடிய பல்கலைக் கழகசேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் றீடோ நிறுவனம் சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நடாத்தும் உயர்தரம் 2005 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு மு/முல் லைத்தீவு ம.வியில் அப் பாடசாலை அதிபர் தலைமையில் ஆரம்பமானது .வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கான வகுப்புக்கள் யா/உடுத்துறை ம.வியில் மாணவர் அமைப்புப் பிரதேசப் பொறுப்பாளர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு ஆரம்பமானது



அதன் தொடர்ச்சியாக நேற்று சனிக்கிழமை முற் பகல் 9.00மணிக்கு மு/செம்மலை ம.வியில் ஆரம்பமானது.

எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மு/இரணைப்பாலை ம.வியிலும் இதே நாள் பிற்பகல் 2.30மணிக்கு யா/ஆழியவளை ம.வியிலும் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

## செயற்கைக் கால் உற்பத்தியை விரிவாக்க வெண்புறா நிறுவனம் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனத்தினரால் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் செயற்கைக்கால் உற்பத்தியில் தீவிர முனைப்புடன் செயற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

நாளொன்றிற்கு ஒரு செயற்கைக்காலினை உற்பத்தி செய்து வந்த மேற்படி நிறுவனம் தற்போது இரவு பகலாக செயற்கைக்கால் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றது.

சுனாமி பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு கால்களை இழந்த மற்றும் செயற்கைக் கால்களை மேற்படி அனர்த்தத்தின் காரணமாக இழந்தவர்களுக்கு மீளச் செயற்கை கால்களை வழங்கும் வகையில் ஐநூறுக்கும் மேற்பட்ட செயற்கை கால்களினை உற்பத்தி செய்ய வேண்டியுள்ளதெனவும், அந்தவகையில் தற்போது செயற்கைக்கால் உற்பத்தியினை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதெனவும் இதுதவிர மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மட்டு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் செயற்கைக்கால்கள் வழங்கப்பட வேண்டியுள்ளதன் காரணமாக மேற்படி பணியினைமேலும் துரிதப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்ய முன் அனுமதி தேவை

## - சிறிலங்காப் படையினர் திடீர் உத்தரவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரத்தில் உள்ள கண்ணாடிப்பிட்டி மயானத்தில் உடல்களைத் தகனம் செய்வதற்கு கிராம அலுவலரின் முன் அனுமதி பெறப்படவேண்டுமென சிறிலங்காப் படையினர் திடீர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

படையினரின் இந்த உத்தரவை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் சிறிலங்காப்படையினரின் தலைமை அதிகாரியை சந்தித்து இந்த உத்தரவு நீக்கப்படவேண்டும் எனத் தெரிவித்ததுடன் அதற்கான சரியான காரணங்களையும் விளக்கிக் கூறினார்

படையினர் கெடுபிடிகள் தொடரும் பட்சத்தில் மக்கள் போராட்டத்தில் குதிக்கும் நிலை உருவாகுமெனவும் அவர் எச்சரித்துள்ளார். (28)

# மாதகல் கடற்றொழிலாளரின் தொழில் மேம்பாட்டிற்கு உதவி

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள யாழ். மாதகல் பிரதேச கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான உதவிகளை " கெயார்" நிறுவனம் வழங்கியுள்ளது.

பாதிக்கப்பட்ட இப்பகுதி தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்த சிறிலங்கா அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பதைச்சுட்டிக்காட்டி யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத்தினர் விடுத்த வேண்டுகோளுக் கமையவே "கெயார்" இவ் உதவிகளை வழங்கவுள்ளது.

இதனடிப்படையில் சுனாமி அனர்த்தத்தால் தொழில் உடமைகளை இழந்த மீனவர்களுக்கு தொழில் உபகரணங்களும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. (33)

# யாழ்.இல் ராணுவ சிவில் நிர்வாக அலுவலகங்களால் யுத்த பீதி!

(தென்மராட்சி)

**யாழ்.குடாநாட்டில் மீண்டும் இராணுவத் தினரின் "சிவில் நிர்வாக அலுவலகங்கள்" இயங்க ஆரம்பித்துள்ளன.**

சமாதான ஒப்பந்த காலத்திற்கு முன்பு யாழ்.குடாநாட்டில் இந்த அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருந்தன. ஒப்பந்தம் கைச்சாத்தாகி பாதைகள் திறக்கப்பட்டபின் இவை செயலிழந்து போயிருந்தன.

ஆனால் மீண்டும் தற்போது அவை இராணுவக் காவலரணுடன் சேர்ந்ததாக "சிவில் நிர்வாக அலுவகம்" என்ற பெயர்ப்பலகை தொங்க விடப்பட்டு செயற்பட ஆரம்பித்துள்ளது.

இந்த அலுவலகம் முன்பு யாழ் குடாநாட்டில் இராணுவத்தினரிற்கு சந்தேகத்திற்கிடமானோரை வரவழைத்து விசாரிக்கவும், விடுதலைப்புலிகளின் நடமாட்டம் தொடர்பாக படையினருக்கு தகவல் வழங்குவோர் இலகுவாக இங்கு சென்று வழங்கவும், புதியவர்களின் நடமாட்டம் தொடர்பாக விசாரிக்கவும், மற்றும் இராணுவத்தினரின் உச்ச பாதுகாப்புக்கு அப்பாற்பட்ட பகுதி மக்களுக்கும், அப்பிரதேசத் திற்குள் சென்று வருவோருக்கும் பாஸ் நடைமுறையினை செயற்படுத்துவதற்குமென இராணுவ புலனாய்வு நடவடிக்கைகள் இந்த அலுவலகம் மூலம் செயற்படுத்தப் பட்டு வந்தன.

அத்துடன் மக்கள் பிரச்சினைகளைத் தீர்தல் என்ற போர்வையில் தமக்கு விரோதமானவர்கள் பற்றி உண்மைக்குப் புறம்பான முறைப்பாடுகளை இந்த அலுவலகத்தில் செய்து அவர்களை இராணுவத்தினா மோசமான தாக்குதலுக்கு உள்ளாக்கவும் தடுத்துவைக்கவும் என பல்வேறு செயற்பாடுகளை இந்த அலுவலகம் செய்து வந்தது.

இந்த அலுவலகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பது மக்கள் மத்தியில் மீண்டும் பழைய பாஸ் நடைமுறை உட்பட இராணுவக் கெடுபிடிகள் ஆரம்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

# மாணவர் அமைப்பின் பாண்ட் வாத்தியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை பாண்ட் வாத்திய அணிகளை வளர்க்கும் நோக்குடனும் தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் பாண்ட் வாத்தியப் போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் தமது கோட்ட அலுவலகங்களுடனோ அல்லது மாணவர் அமைப்புடனோ தொடர்பு கொண்டு போட்டி நிபந்தனைகள் தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்வதுடன் விண்ணப் பங்களையும் சமர்ப்பிக்கலாம்.

போட்டிக்குரிய இசைகளாக தமது பாடசாலைக் கீதங்களுடன் பொதுக்கீதம் (புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்) இசைக்கப்பட வேண்டும் வலயமட்டப் போட்டிகள் அடுத்தமாதம் 20 ஆம் திகதி முதல் இடம்பெறும். இதில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்ற முடியும். (36)

# அலுவலக வசதியின்மையால் மக்கள் பணிகள் பாதிப்பு

யாழ்.மாவட்டத்தில் பல பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளைகளுக்கு அலுவலக வசதிகள் இன்மையால் மக்கள் பணிகளை முன்னெடுப்பதில் பெரும் பாதிப்புக்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தெரியவருகிறது.

நல்லூர், கரவெட்டி, கோப்பாய்,மருதங்கேணி, வேலணை போன்ற பிரதேச செலயலகப்பிரிவுகளில் இயங்கும் செஞ்சிலுவைச்சங்கக் கிளைகளே அலுவலக வசதிகள் இன்மையால் பெரும் பாதிப்புக்களை சந்தித்து வருகிறது. (28)

# சாவகச்சேரி நூலகத்திற்கு 1.5 மில்லியன் ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் பொதுநூலகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கென யாழ்.அரச செயலகம் 1.5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந் நிதி மூலம் மேற்படி நூலகத்தின் தளபாட, நூல் மற்றும் இடவசதிகள் என்பன மேம்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(33)

# சங்கானைக்கான நீர்விநியோகம் நாளை ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிற்கான நீர் விநியோகம் நாளை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதேவேளை அன்றையதினம் சங்கானை ஆதாரவைத்திய அதிகாரிக்கான விடுதியும் காலை ஒன்பது மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (33)

# தொலைநகல் இயந்திரம் மீளவும் சீராக்கப்படுமா?

(தென்மராட்சி)

சாவகச்சேரி தபால் நிலையத்தில் இருக்கும் தொலைநகல் இயந்திரம் கடந்த ஆறு மாதங்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது.

இதனால் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இவ்விடயம் குறித்து யாழ்.பிராந்திய தபால் அத்தியட்சகருக்குத் தகவல் தெரியப்படுத்தியும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. என தெரிவிக்கப்படுகின்றது. (28)

# மண்டைதீவுப் பகுதிக்கு மின்சாரம் கிடைக்குமா?

யாழ்.மண்டைதீவுப்பகுதிக்கு மின்சாரத்தை விநியோகம் செய்ய நடவடிக்கைகளை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் இலங்கை மின்சாரசபையினரிடம் தொடர் கோரிக்கைகளை விடுத்து வருகின்ற போதும் அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இதனால் மின்சக்தியை அடிப்படையாகக்கொண்ட கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதிக்கான மின்விநியோகம் மண்டைதீவைப் படையினர் ஆக்கிரமித்த காலம் தொடக்கம் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# கல்வி டிப்ளோமா விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தில் 2005/2006 ஆம் ஆண்டிற்கான கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இக் கல்வி நெறி தொடர்பான மேலதிக விபரங்களை யாழ். இந்துக்கல்லூரி மற்றும் வலயக் கல்விப் பணிமனைகள் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (33)

## - யாழ்.இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் -

# கடற்றொழிலை மீள ஆரம்பிக்க கடற்படை முட்டுக்கட்டை

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேச கடற்றொழிலாளர்கள், பாதிக்கப் பட்டுள்ள தமது தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு சிறிலங்கா கடற்படையினரது கெடுபிடி நடவடிக்கைகள் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கடற்றொழில் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கான வான் தோண்டுவதை தடுத்தல். கடற்கரையோரங்களில் முட்கம்பி வேலிகளை இட்டும், புதிய காவலரண்களை அமைத்தும் இயல்பான கடற்றொழில் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல், கடல் வலயப் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்துதல் போன்ற கடற்படையினரது நடவடிக்கைகளாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வலிகாமம், தீவகம் போன்ற பகுதி கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்து தமது தொழிற்றுறையை மீளக் கட்டியெழுப்ப முடியாத அவல நிலை காணப்படுவதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் சங்க சமாச சம்மேளனங்களின் தலைவர் த.தவரெட்ணம் தெரிவித்தார் (33)

## நிர்வாகிகள் தெரிவு

கொடிகாமம் வணிகர் மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவராக க.சின்னத்தம்பியும் செயலாளராக மு.உதயகுமாரும் பொருளாளராக கி.யோகேந்திரராசாவும், உப தலைவராக , பொ.செல்லப்பாவும் உப செயலாளராக கி.ஞானலிங்கமும் நிர்வாகசபை உறுப்பினர்களாக பொ.பற்குணசீலன் , செ.அருந்தவராசா, சு.அருணாச்சலம், இ.சண்முகலிங்கம், கணக்காய்வாளராக, சா.அருட்பிரகாசம், ஆகியோரும் போஷகராக வி.அருளம்பலமும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். (28)

# சாரதி அனுமதிப்பத்திரப்பரீட்சை அடுத்த மாதம் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சாரதி அனுமதிப்பத்திரத்தினை பெறுவதற்கான எழுத்துப்பரீட் சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் இப்பரீட்சை அடுத்த மாதம் 7 ஆம் திகதி 9.30 மணிக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் இடம் பெறுமெனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# வினாடி வினாப் போட்டி விண்ணப்பம் கோரல்

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையில் வினாடிவினாப்போட்டியொன்றை நடாத்த யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு தீர்மானித்துள்ளது.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களை அடுத்தமாதம் ஆறாம் ஆம் திகதிவரை சமர்ப்பிக்க முடியும்.

போட்டிகள் மாவட் மட்டத்தில் இடம்பெறும். ஒரு பாடசாலையிலிருந்து ஒரு அணி மாத்திரம் பங்குபற்றலாம். வெற்றிபெறும் முதல் மூன்று அணிகளுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன் முதல் இடம்பெறும் அணியின் போட்டியாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (36)

# ஈராக் பொதுத் தேர்தல் முடிவுகள்

# ஈராக்கைப் பிளவுபடுத்தும் முயற்சிக்கு வெற்றி?

கடந்த ஒரு சில மாதங்களாக சுனாமி அலைத் தாக்கம் தொடர்பாக ஒரு முகப்படுத்தப்பட்ட உலக ஊடகங்களின் பார்வை சற்றே விரிந்து சர்வதேச விவகாரங்களுக்குள் நுழைய ஆரம்பித்துள்ளன. மறுபடியும் ஈராக் விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.

ஈராக்கின் கடந்த ஐம்பது வருட கால வரலாற்றில் நடைபெறாத பொதுத் தேர்தல் ஒன்று கடந்த மாதம் 30 ஆம் திகதி நடைபெற்று ஈராக்கைப் புதிய விவகாரங்களிற்குள் சிக்க வைத்திருக்கிறது.

2002 ஆம் ஆண்டு ஈராக்கை அமெரிக்கக் கூட்டுப்படைகள் கைப்பற்றியதற்குப் பின்னர் அங்கு தீவிரவாதப்போராட்டங்கள் வலுப்பெறத் தொடங்கின. கார்க்குண்டுத் தாக்குதல்கள், பணயக்கைதிகளிற்கு கழுத்தறுப்பு, அமெரிக்கப் படைகளிற்கு எதிரான கெரில்லாத்தாக்குதல்கள் என ஈராக்கின் உட்கட்டமைப்பு பல்வேறு பிரிவுகளாகி யுத்த களங்களைத் தோற்றுவித்திருந்தது.

அமெரிக்காவினுடைய தன்னிச்சையான போக்குகள் உலக நாடுகள் பலவற்றின் மனப் புகைச்சலுக்குள்ளானது. இந்த நிலையை உணர்ந்துகொண்ட அமெரிக்கா ஈராக்கில் ஒரு சனநாயகம் உள்ளது என்பதைக் காட்ட முயன்றது. அதற்காக ஈராக்கியரை வைத்தே ஈராக்கை ஆட்சி செய்விப்பது போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்குவதற்கு 'இயாத் அல்லாவி' தலைமையிலான இடைக்கால அரசை நிறுவியிருந்தது. ஆனால் ஈராக்கியர்கள் அந்த இடைக்கால அரசை ஏற்கவில்லை என்பதை இடைக்கால அரசு நிறுவப்பட்டதன் பின் ஈராக்கில் வலுப்பெற்ற உள்நாட்டு யுத்தங்கள் சான்றாய் அமைந்தன. இந்த நிலையில் அமெரிக்கா பெரும் சிக்கல்களை அனுபவிக்கத் தொடங்கியது. ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கக் கூட்டுப்படைகள் உயிரிழப்புக்களைச் சந்திப்பது ஒருபுறமிருக்க, தீவிரவாதிகளின் வியூகங்களால் அமெரிக்கா தனிமைப்படுத்தப்படும் நிலையையும் தோற்றுவித்திருந்தது. அதாவது அமெரிக்காவிற்கு ஆதரவான நிலையில் ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் எந்த நாட்டைச் சேர்ந்தோரானாலும் அவர்கள் பணயக் கைதிகளாக்கப்பட்டு அந்தந்த நாடுகளுக்கு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் பணயக் கைதிகளின் தலைகள் துண்டிக்கப்படும்காட்சிகளை வீடியோக்களாக வெளியிட்டு உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கினர்.



ஈராக் யுத்தத்தின் போது



ஜோர்ச் டபிள்யூ புஷ்

இந்த நிலையில் அமெரிக்காவிற்கு சார்பான நிலையிலுள்ள எந்தவொரு நாட்டினுடைய சாதாரண பிரஜையானாலும் அவர் ஈராக்கில் தங்கியிருந்தால் தீவிரவாதிகள் அப்படிப்பட்டவர்களைக் கைது செய்து தடுத்துவைத்து சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு தமது கோரிக்கையை விடுப்பர்.

தீவிரவாதிகளின் கோரிக்கைகள் பொதுவாக அமெரிக்காவிற்கான ஆதரவை சம்பந்தப்பட்ட நாடுகள் விலக்கிக்கொள்ள வேண்டும். இல்லையேல் பணயக் கைதிகள் கொல்லப்படுவார்கள் என்பதாய் இருக்கும். இப்படிப்பட்ட வியூகங்களால் தீவிரவாதிகள் தமக்குச் சாதகமான அனுகூலங்களைப் பெற்றனர்.

பிரிட்டன் போன்ற அமெரிக்கா சார்பான நாடுகளில் மக்களின் மனங்களில் அச்ச உணர்வு வலுப்பெற்றது. தமது நாட்டவர்கள் கைது செய்யப்படுவதும் கொலை செய்யப்படுவதும் மக்கள் மனங்களில் தீவிர தாக்கங்களை ஏற்படுத்தியது. இதனால் அந்தந்த நாடுகளின் உள்நாட்டு அரசியலில் வலுவான தாக்கங்களை ஏற்படுத்தவே அந்த நாடுகளுக்கு தமது அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய காட்டாயம் எழுந்தது.

இது அமெரிக்காவிற்கு பெரும் அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கின. ஈராக்கில் தான் தனிமைப்படுத்தப்படுவதை உணர்ந்த அமெரிக்கா, ஈராக் விடயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாய நிலைக்குத்தள்ளப்பட்டது.


இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலேயே ஈராக்கில் ஒரு பொதுத் தேர்தலுக்குப் பச்சைக்கொடிகாட்ட வேண்டிய கட்டாயம் அமெரிக்காவிற்கு ஏற்பட்டது. அதன்படி சில மாதங்களிற்கு முன்பாகவே தேர்தல் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டது. சனவரி 30 ஆம் திகதி தேர்தல் என நாளும் குறிக்கப்பட்டாயிற்று.

தேர்தல் அறிவிக்கப்பட்டதும் ஈராக் அடுத்தகட்ட நெருக்கடி ஒன்றை எதிர் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. அதாவது தேர்தலில் போட்டியிடுகின்ற அமைப்புக்கள் ஒன்றையொன்று முட்டி மோதத் தொடங்கின. ஒரு சில அமைப்புக்கள் தேர்தலை எதிர்த்து தமது நடவடிக்கைகளை மேற்கொண்டன. இந்தக்கட்டத்தில் அமெரிக்காவிற்கு சற்றே விலத்தி நின்று வேடிக்கை பார்க்க இடைவேளை கிடைத்தாலும் ஈராக்கில் கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமை அமெரிக்காவிற்குப் பெரும் தோல்வியாகவே இருந்தது.

இந்த இடத்தில் ஈராக்கின் உள் அரசியலைப் பற்றி கொஞ்சம் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். சதாம் ஆட்சிப் பீடத்தில் இருந்து அகற்றப்பட்டதன் பின் ஈராக் சனநாயகத்திற்குள் பிரவேசிப்பது என்ற போர்வையில் பல இன முஸ்லிம் பிரிவினரும் தமது இனத்தை முன்னுரிமைப் படுத்தி செயற்படுவதில் தீவிரம் காட்டினர். அவற்றில் 'ஷியா' முஸ்லிம் பிரிவினர் ஒரு அணியாகவும் 'குர்தீஷ்' பிரிவினர் வேறோர் அணியாகவும் 'சுனி' முஸ்லிம் பிரிவினர் இன்னோர் அணியாகவும் செயற்பட்டனர். அதைவிட அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட 'இயாத் அல்லாவி' தலைமையிலான இடைக்கால அரசு தனக்கோர் அணியினையும் உருவாக்கியிருந்தது. இது பெரும்பாலும் அமெரிக்கா சார்புடைய அமைப்பாகவே கருதப்பட்டது. இவைகளைவிட முஸ்லிம் மதத்தலைவர்களைக் கொண்ட பள்ளிவாசல் சாம்ராஜ்யங்களும் ஈராக்கில் வலுப்பெறலாயிற்று.

இந்த அமைப்புக்களுள் 'சுனி' முஸ்லிம் பிரிவினர் சதாம் விசுவாசிகள். சதாமும் சுனி இன முஸ்லிம் என்பது குறிப்பிடத்தக்கது. 'சதாம் ஹுசைன்' ஆட்சிக் காலத்தில் 'குர் தீஷ்' முஸ்லிம் பிரிவினர் ஒடுக்கப்பட்டவர்கள். ஈராக்கின் எண்ணை வளம்மிக்க வடபகுதியைத் தாயகமாகக் கொண்ட குர்தீஷ் இனமக்கள் சதாம் ஆட்சியை எதிர்த்து போராடி வந்தனர். அத்துடன் அமெரிக்கக் கூட்டுப்படைகள் ஈராக்கிற்குள் நுழைந்த வேளை 'குர்தீஷ்' போராளிகளும் அவர்களுக்குத்துணையாக நின்று சதாமை எதிர்த்து போரிட்டார்கள் என்பது இங்கு முக்கியமான விடயம்.

சதாம் ஆட்சிக்காலத்தில் 'நீறுபூத்த நெருப்பாய்" இருந்த ஈராக்கின் உள் முரண்பாடுகள் சதாம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டபின் வலுப்பெறத் தொடங்கின. அந்த முரண்பாடுகளை மேலும் வலுப்பெற வைப்பதாய் ஈராக்கின் தேர்தற களம் சூடுபிடித்திருந்தது. மௌனமாக ஒன்றையொன்று எதிர்த்து வந்த கட்சிகள் நேரடியாகவே களத்தில் இறங்கி ஒன்றையொன்று தாக்கத்தொடங்கியிருந்தன. இந்த நிலை அமெரிக்காவின் பிரித்தாளும் தந்திரத்திற்கு வலுச்சேர்த்திருந்த வேளை தேர்தல் நடைபெற்று முடிவுகளும் அறிவிக்கப்பட்டாயிற்று.



இயாத் அல்லாலி

எதிர்பார்ப்பிற்கு மாறாக 60 வீதமான ஈராக்கியர்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டனர். இதில் 'சுனி' முஸ்லிம் பிரிவினர் வாக்களிப்பை பெரும்பாலும் புறக்கணித்திருந்தனர். இந்த நிலையில் வெளியான ஈராக் தேர்தல் முடிவுகள் இழுபறி ஆட்சியமைப்பையே கொண்டு சேர்க்கும் என நோக்கப்படுகிறது.

தேர்தலில் போட்டியிட்ட 'ஷியா' முஸ்லிம் கூட்டமைப்பு 140 இடங்களையும் 'குர்தீஷ்' கூட்டணி 75 இடங்களையும் தற்காலிக பிரதமர் 'இயாத்அலாவி' தலைமையிலான கட்சி 30 இடங்களையும் பெற்றிருந்தன.

ஈராக்கின் அரசியல் விதிகளின்படி முதலில் சனாதிபதியும் இரு துணை சனாதிபதிகளும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படியாயின் சனாதிபதியைத் தெரிவு செய்யும் கட்சிக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும். அதாவது 275 அங்கத்தவர்களைக் கொண்டதான அரசாங்கத்தில் 184 உறுப்பினர்கள் பெரும்பான்மைக் கட்சியில் இருக்க வேண்டும்.

அடுத்ததாக பிரதமரைத் தெரிவு செய்வதானால் அறுதிப் பெரும்பான்மையாக 138 உறுப்பினர்கள் வேண்டும்.

இப்படிப்பட்ட நிலைப்பாடுகளைக் கொண்ட ஈராக் தேர்தல் முடிவுகள் அமெரிக்காவிற்கு சில சாதக பாதக நிலைகளை உருவாக்கி இருக்கிறது என்பதை உணர முடிகிறது.



வாக்களிக்கும் ஈராக்கியர்

அமெரிக்க கைப்பொம்மை பிரதமர் என வர்ணிக்கப்பட்ட தற்காலிக பிரதமர் 'இயாத் அலாவி' ஈராக்கியர்களால் தூக்கியெறியப்பட்டிருக்கிறார். இதன் மூலம் ஒரு விடயத்தை ஈராக்கியர்கள் உலகிற்கு உணர்த்தியுள்ளார்கள். அதாவது தாம் எப்போதுமே அந்நிய சக்திகளின் பின்னணிகளை எதிர்க்கிறோம் என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டியிருக்கிறார்கள். இந்த விடயம் ஈராக்கில் கால்பதித்து நிற்கின்ற அமெரிக்க சக்திகளுக்கு பெருத்த அவமானமாகவே கருதப்படுகிறது.

அடுத்து அமெரிக்காவிற்கான சாதக நிலை எதுவெனப் பார்த்தால் தேர்தல் முடிவுகள் காட்டியுள்ள ஈராக்கியர்களின் ஒரு முகப்படாத நிலையினால் எந்த ஒரு கட்சியும் ஆட்சியமைக்க முடியாத நிலையானது அமெரிக்காவின் உள்நாட்டில் பிரித்தாளும் தந்திரத்தை வலுப்படுத்துவதற்கு சாதகமாகவுள்ளது. இதன் மூலம் ஈராக்கில் ஏற்படப்போகும் உள்நாட்டு எதிர்ப்பை சமாளிக்க அமெரிக்காவிற்கு வாய்ப்பாக இருக்கும்.

140 ஆசனங்களைப் பெற்ற 'ஷியா' முஸ்லிம் பிரிவினர் 75 ஆசனங்களைப் பெற்ற குர்தீஷ் பிரிவினரின் ஆதரவைக் கோரியுள்ள நிலையில் தாம் ஆதரவு தருவதானால் குர்திஷ் இன மக்கள் வசிக்கும் ஈராக்கின் வட பகுதியை 'குர்தீஷ்' கூட்டணியிடம் ஒப்படைக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளனர்.

இப்படிப்பட்ட பிரிவினைகள் எதிர்காலத்தில் ஈராக்கை பல துண்டுகளாகப் பிரிக்கும் ஆபத்து நிலைக்கு கொண்டு போகும் என எதிர்பார்த்தாலும் அமெரிக்காவின் அணுகுமுறை இவ் விடயத்தில் சற்று அவதானமாகவே இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

ப. துஷ்யந்தன்

அதாவது ஈராக்கில் குர்திஸ்கள் கோருகின்ற சுயாட்சி எதிர்காலத்தில் துருக்கியில் இருக்கின்ற குர்திஷ் போராளிகளின் தன்னாட்சி கோரிக்கையையும் நியாயப்படுத்துவதாகிவிடும். அப்படி நிகழ்ந்தால் அமெரிக்கா சார்புடைய நெட்டோ அமைப்பில் அங்கம்வகிக்கும் துருக்கி உடைவதை அமெரிக்கா விரும்பாது என்றே எதிர்பார்க்கலாம்.

அப்படிப்பட்ட நிலமையை விரும்பாத அமெரிக்கா ஈராக்கில் சாதாரண உள்நாட்டு மோதலையே அனுமதிக்கும் என எதிர்பார்க்கலாம்.

எனவே புதிய அரசியல் நெருக்கடிகளுக்குள் சிக்கித்தவிக்கும் ஈராக் தீர்க்க தரிசனமாகச் சிந்தித்து ஒருமுகப்பட்டு செயற்பட மறுக்குமாகில் ஈராக்கின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# தமிழ் மக்களைப் பாதுகாக்கக் கூடிய ஒரே அமைப்பு விடுதலைப் புலிகளே!

-ஐ.நா.செயலருக்கு கிழக்குப் பல்கலை சமூகம் அறிவுறுத்து

(மட்டக்களப்பு)

**பல சவால்களுக்கு மத்தியில் யுத்த நிறுத்தத்தை சீராகப் பேணியும் அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முன் முயற்சிகளை மேற்கொண்டும் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்புப் பணிகளில்காத்திரமாக ஈடுபட்டு வரும் விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்படும் ஆதாரமற்ற கருத்துக்கள் கண்டிக்கத்தக்கதாகும் என கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் ஐ.நா. பொதுச் செயலாளருக்குத் தெரிவித்துள்ளது.**

விடுதலைப்புலிகள் சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வதாக ஐ.நா. தெரிவித்திருந்த கருத்தை கிழக்குப் பல்கலைக் கழக சமூகம் வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக கண்டன அறிக்கை ஒன்றை ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு அவர்கள் அனுப்பிவைத்துள்ளனர் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை, சிறுவர்களைக் கட்டாயமாகப் படையில் ஆட்சேர்க்கும் நாடுகள், அமைப்புக்கள் பட்டியலில் உள்ளடக்க ஐ.நா. முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறிகின்றோம். சிங்களப் பேரினவாதத்தினதும், பேரினவாத அரசிடமிருந்தும் தமிழ் மக்களைப் பாதுகாக்கக்கூடிய, அவர்களின் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாய் வாழ வழிசெய்யக்கூடிய ஒரே அமைப்பாக தமிழர்கள் விடுதலைப்புலிகளையே நம்பிக்கை கொள்கின்றனர். படைத்துறை ரீதியில் மிகப்பாரிய வெற்றிகளைப் பெற்று தந்த விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்தினது வேண்டுகோளுக்கு மதிப்பளித்து ஒரு யுத்த நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தியதுடன் சமாதானத்துக்கான தமது முன் முயல்வை வெளிப்படுத்தினார்கள். பல்வேறுபட்ட உள்ளூர், சர்வதேச அமைப்புக்களுடன் நல்லுறவைப் பேணி அவர்களின் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன் அதனைப் பல்வேறு ஆத்திரமூட்டல்களுக்கு மத்தியிலும் இதுவரை இறுகக் கடைப்பிடித்து வருகின்றனர். கடந்த காலங்களில் சிறிலங்கா அரச பயங்கரவாதம், தன் படைத்துறையைக் கொண்டு ஏவிவிட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளின் போது தமது தாய் தந்தையரைப் பலி கொடுத்த இளைஞர்களை காப்பகங்கள் அமைத்து பாதுகாத்து பராமரித்தவர்கள் இவர்கள். இன்றும் இவ்வகையான காப்பகங்கள் பல சிறப்பாக இயங்கி வருகின்றன. கடந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது புலிகள் மேற்கொண்ட மீட்பு நிவாரணப் பணிகளை சர்வதேச சமூகமே வியந்து பாராட்டி நின்றது. அவ் அனர்த்தத்தில் உறவுகளைப் பறிகொடுத்த சிறுவர்களையும் அரவணைத்து பராமரிக்கும் பாரிய பணியையும் விடுதலைப்புலிகள் செய்து வருகின்றனர். மற்றும் விடுதலைப்புலிகளுடன் சுயமாக இணைந்து கொண்ட சிறுவர்கள் பலர் பல்வேறு சந்தர்ப்பங்களில் யுனிசெப் ஊடாகவும், பொது அமைப்புக்கள் ஊடாகவும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் கூட இவ்வாறு 23 சிறுவர்கள் கிளிநொச்சியில் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இன்று ஐ.நா. வெளியிட்டிருக்கும் "ஆட்சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்கள் பட்டியலில் உள்ள பெயருக்குரிய அனேகர் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பது எம்மால் காணமுடிகிறது. மாணவர்கள் தொழில் செய்பவர்கள், என திருமணம் செய்து குழந்தைகள் உள்ளவர்கள் கூட இப்பட்டியலில் உள்ளடக்கப் பட்டுள்ளனர்". தற்போதைய நிலைமைகளில் பல சவால்களுக்கு மத்தியில் யுத்த நிறுத்தத்தை சீராகப் பேணியும், அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முன் முயல்வுகளை மேற்கொண்டும் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்புப் பணிகளில் காத்திரமாக ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகள் மீது இவ்வகையான ஆதாரமற்ற கருத்துக்கள் கண்டிக்கத்தக்க தாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதிப்புற்றோருக்கு உதவி

கல்மடு சம்புக்குளம் பகுதியில் கடந்த 19ஆம்திகதி தீயினால் குடிசை எரிந்து நாசமாகியதால் நிர்க்கதிக்குள்ளான நா.ஆறுமுகம் குடும்பத்துக்கு கிளி.மாவட்ட த.பு.க.அனுசரணையுடன் கண்டாவளை அபிவிருத்தி நிறுவனம் உணவுப்பொருட்கள் உட்பட பாய், வாளி, பெற்சீற் கூரைவிரிப்பு, நுளம்புவலை மற்றும் வீட்டுப்பாவனைப் பொருட்களை வழங்கியது. (14)

# உதவுவதாக உறுதியளித்த நிறுவனங்கள் இதுவரை எதுவித உதவிகளும் வழங்கவில்லை

-முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூ.சங்கத் தலைவர்

(முல்லைத்தீவு)

சுனாமி ஏற்பட்டு இரண்டு மாதம் கடந்த நிலையில் முல்லைத்தீவில் மீனவர்களுக்கு எந்த விதமான உதவிகளும் கிடைக்கவில்லையென முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்தார். கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு குறைந்தது ஐந்தைந்து பேராகச் சேர்ந்து தொழில் செய்வதற்கேனும் படகுகளும் அதற்கான வலைகளும் இயந்திரங்களும் தேவை. தற்போது ஆற்றுத் தொழிலை மேற்கொள்வதாயினும் குறைந்தது மூவாயிரம் வீச்சு வலைகளாவது தேவை. இங்கு வருகை தந்திருந்த பலநிறுவனங்கள் வாக்குறுதி அளித்துச் சென்ற போதும் இன்றுவரை எந்தவொரு உதவிகளும் வழங்கப்படவில்லை.

இதனால் கடற்றொழிலாளர்கள் பெரும் துன்பத்துடன் இருக்கின்றனர். உணவுக்கு யாரையும் நம்பி இருக்கும் நிலையே ஏற்பட்டிருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (20)

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைப் பொதுக்கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைப் பொதுக்கூட்டம் கடந்த புதன் கிழமை காலை 10.00 மணிக்கு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளைத்தலைவர் கிருஸ்ணராஜா தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப்ஸ்ராலின் செயலாளர் ஜயசிங்க, விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல்,மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செல்வி அலை, வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செட்டிகுளம் கோட்ட செயலாளர்,நிர்வாக உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதில் வவுனியா மாவட்டத்தில் கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள் மீது மேற்கொள்ளும் பழிவாங்கல் இடமாற்றங்கள்,முறையற்ற செயற்பாடுகள் குறித்துகலந்துரையாடப்பட்டதுடன் இவ்வாறான செயற்பாடுகள் இனியும் தொடருமேயானால் இலங்கை ஆசிரியர் சங்கம் இது குறித்து மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (10)

# குளத்தில் குளிக்கச்சென்ற ஆசிரியர் நீரில் மூழ்கி மரணம்!

இரு-மாணவர்கள் கைது

(செட்டிகுளம்)

வவுனியாவில் இயங்கிவரும் மடுகந்த ஸ்ரீ தம்மரத்தின பிரிவனை பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் அனுராதபுரம் பசவற்குளத்தில் நீரில் மூழ்கி மரணமாகியுள்ளார். இவருடன் சென்ற இரண்டு மாணவர்கள் அனுராதபுரம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறந்த ஆசிரியர் தாரக பெரேரா (வயது-22) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவருடன் நான்கு பேர் சென்றதாகவும் குளத்தில் இருவர் இவருடன் குளித்ததாகவும் இதன் போதே நீரில் மூழ்கி இறந்திருப்பதாக அனுராதபுரம்பொலிசார் தெரிவிக்கின்றனர். (21)

# ஆசிரிய இடமாற்றங்கள் பழிவாங்கலின்றி நீதி,நேர்மையுடன் மேற்கொள்ளப்படவேண்டும்

-வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் வலியுறுத்து

(வவுனியா)

போர்உக்கிரமாக நடந்தகாலத்தில் இடப்பெயர்வுகள், இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் அரும்பணி ஆற்றியவர்கள் ஆசிரியர்கள். இவ்வாறான நெருக்கடியான காலத்தில் போர் நடைபெற்ற இடங்களில் அரும்பணி ஆற்றிய ஆசிரியர்களுக்கு சமாதான காலத்தில் நல்ல ஒரு பாடசாலையை வழங்கவேண்டுமென வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியாக் கிளைப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்; வவுனியாவில் இன்று ஆசிரியர் இடமாற்றம், கிராமசேவை அலுவலர் இடமாற்றம் என்ற இரு பெரும் பிரச்சினைக்குரிய இடமாற்றங்கள் உள்ளன. ஆசிரிய இடமாற்றம் தொடர்பாக வவுனியா தெற்கு கல்விவலய அதிகாரிகள், வவுனியா மாவட்ட கல்விக் கழகப்பொறுப்பாளர் ஞானத்துடனும், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினார்களே தவிர அக்கலந்துரையாடலில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அதன் பின் கல்வி அதிகாரிகள்ால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றப்பட்டிய்ல் குழு நிலையில் பரிசீலிக்கப்பட வில்லை, அதேவேளை வவுனியா மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானத்திற்கு இடமாற்றப் பட்டியல் காட்டப்படவில்லை.

சுனாமி நிதி சேகரிப்பிற்கும் இடமாற்றத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை. சுனாமி நிதிசேகரிப்பு என்பது விடுதலைப்புலிகளால் கேட்கப்பட்ட தொன்றல்ல. அந்நிதியை வவுனியா அரச அதிபர் சகல திணைக்களங்களிடம் இருந்து தருமாறு கேட்டிருந்தார். அவ்வாறு கோரப்பட்ட சுனாமி நிதியை வழங்க மறுத்த சில ஆசிரியர்கள் இடமாற்றப்பட்டமை உண்மை போல் தெரிகின்றது. ஏனெனில் சுனாமி நிதி வழங்க மறுத்த ஆசிரியர்களுக்கு கல்வி அதிகாரிகள் இடமாற்றம் வழங்குவோம் என சவால் விட்டிருந்தனர். அதன்படி சில ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. ஆசிரிய இடமாற்றங்கள் பழிவாங்கல் இன்றி நீதியாகவும், நேர்மையாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும். கல்வி அதிகாரிகள் இட மாற்றங்களை மேற்கொள்ளும் போது இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்,தமிழீழ கல்விக் கழகம் என்பவற்றுடன் கலந்துரையாடி பிரச்சினைகளை ஆராய்ந்தே இடமாற்றங்களை மேற்கொள்ளவேண்டும்.

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றப் பிரச்சனையால் பாடசாலைகளில் ஒழுங்கான கற்பித்தல் நடைபெறுவதில்லை என மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இதனால் இப் பிரச்சினையை விரைவில் தீர்க்கவேண்டும். இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள ஆசிரிய இடமாற்றத்தின் பின்தான் வவுனியாவில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இருக்கின்றதென்பது எனக்குத் தெரியும் அதே போன்று இலங்கை ஆசிரியர் சங்கமும் இருந்துவிடாது ஆசிரியர்களின் நியாயமான விடயங்களில் துணிந்து நின்று செயற்பட வேண்டும்.

கல்வி அதிகாரிகள் எமது இயக்க உறுப்பினர்களின் பெயர்களைப் பாவித்து இடமாற்றங்களை மேற்கொள்வதாகக் கூறினீர்கள் அவ்வாறு எமது இயக்க உறுப்பினர்களின் பெயர்களைப் பாவிக்கும் உரிமையோ, அதிகாரமோ யாருக்கும் இல்லை என அவர் அங்குஉரையாற்றும் போதுதெரிவித்தார். (10)

# வவுனியா ஊடாக வாகனக் கடத்தல்கள் மீண்டும் அதிகரித்து வருகின்றமை கண்டுபிடிப்பு!

-வாகனங்களுடன் பலர் கைது

(செட்டிகுளம்)

வவுனியாவின் ஊடாக வாகனங்களைக் கடத்துவது மீண்டும் அதிகரித்திருப்பதாக வவுனியா பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களுக்குள் ஓமந்தையின் ஊடாக மூன்று வாகனங்களும் உயிலங்குளத்தின் ஊடாக ஒரு வாகனமும் கடத்த முயன்ற போது பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபயசிங்க பண்டா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று ஓமந்தைப் பகுதியில் வைத்து கண்டுபிடிக்கப்பட்ட வாகனமானது கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி நுவரெலிய பகுதியில் வைத்து கடத்தப்பட்டு சாரதி கொலை செய்யப்பட்டதாகவும் அந்த வாகனத்தின் இலக்கம் **wp-hp-7013** ஆக இருந்தபோதும் வாகனத்தின் இலக்கம் தற்போது மாற்றப்பட்டிருப்பதாகவும் புதிய இலக்கம் 252-2203 என இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறான வாகனங்கள் கடத்தலில்தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொளப்பட்டுவருவதாகவும் இவ்வாறான கடத்தலுடன் ஒரு குழு இயங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (21)

# 11 ஆவது ஆண்டில் பூநகரிநகரில்...

01.03.2005 முதல்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

BANK OF TAMILEELAM

தமிழீழ வைப்பகம்

**வைப்புத் திட்டங்கள்**

- சேட்ட வைப்புக்கள்
- நிலையான வைப்புக்கள்

**கடன் திட்டங்கள்**

- தங்க அடைவுக் கடன்
- ஏனைய கடன் வாய்ப்புகள்

மேலும் பல பணிகள்

வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

## தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்

(சி-11566)




எந்நேரத்திலும் உங்கள் தேவைகளை இனம் கண்டு நிறைவு செய்து தரும் உங்கள் பாண்டியனின் இன்னுமொருபேரன் பன்னெறி ஆற்றல் கொண்டவனாக மாறிவிட்டான். ஏன் தெரியுமா?

கடந்த காலங்களில் ஊர்தி உதிரிகளை மட்டும் வழங்கி வந்தவன் இனி...

**கனரக ஊர்திகளின் உதிரிகளை உடன் தருவான்**
**(டோசர், வக்கோ, JCB, மோட்டர் கிறைண்டர்)**

**ஆலைப்பொறிகளின் உதிரிகளை உடன் தருவான்**

புத்தம் புதிய உழுபொறிகள், இரு சில்லு உழுபொறிகள் என்பனவற்றை உடன் தருவான்

அம்மட்டோ!!!
**கண்ணிமைக்கும் நேரத்தில் ஆலைப்பொறிகளை உடன் பெற்றுத்தருவான்**

## இந்தப்பேரன் வேறு யாருமல்லன்




## பாண்டியன் ஊர்தி உதிரிகள் விற்பனைப்பகுதி

ஏ-9 நெடுஞ்சாலை "குறைந்த பணச்செலவு மிகுந்த மனநிறைவு" கிளிநொச்சி (சி-11484)

# கண்ணீர் அஞ்சலி

ஈழவள நாட்டில்
வாழும் தமிழரெலாம்
தாழ்வடையா நிலைவேண்டி- உன்
வாழ்வதனை அர்ப்பணித்தாய்
வீழும் நிலை தனிலும்
விடிவு வேண்டி காத்திருந்தே-எமக்கு
நீதி வழிவிட்டு மீளாத்துயிலடைந்தவரே
மீட்டுகிறோம் உம் நினைவை.

23-02-2005 அன்று இயற்கை எய்திய நாட்டுப்பற்றாளர்
வே.க.ஏரம்பு அவர்களுக்கு எமது கண்ணீர் மல்கிய இதய அஞ்சலிகள்

என்றும் உங்கள் நினைவில்
செல்லையா சிவசாமி குடும்பத்தினர்,
புங்குடுதீவு.



நாட்டுப்பற்றாளர்


## வே.க.ஏரம்பு

அருணோதயம்-புங்குடுதீவு

(சி.11508)

**Shell Solar Centre**

# சன்டெக்



செல்சோலார் நிறுவனத்தின் தமிழீழத்தில் ஏக முகவர்களான சிக்கன கடனுதவி கூட்டுறவு சமாசங்களின் (சி.க.கூ.) கிளிநொச்சி - முல்லைத்தீவு ஆகிய இரு நிறுவனங்கள் தமது மக்களுக்கு செல்சோலார் சக்தி மூலம் வீடுகளுக்கு மின் ஒளியை வழங்கி வரு கின்றது நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகள் சில

(1) இலகு கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்.
(2) சிறப்பான முறையில் பொருத்துதலுடன் பராமரிப்பு விளக்கம்
(3) பொருத்தியபின் தூய்மைப்படுத்தல்.
(4) தமக்கு தேவையான சூரிய கலத்தொகுதியை தெரிவு செய்து கொள்ளல்.
(5) உலக வங்கி சூரிய கல மானியம் ரூபா 7500/-கழிவுடன் பெறலாம்.
(6) சூரிய தட்டிற்கு 10 வருட உத்தரவாதம் (பொறியியல்துறைக்கு).

உலகப் புகழ்பெற்ற செல்நிறுவனத்தின் திறமைமிக்க உருவாக்கம்

தொடர்பு
சி.க.கூ. (கிளிமாவட்டம்)
கணேசபுரம்,
கிளிநொச்சி.

சி.க.கூ. (முல்லை மாவட்டம்)
ஒட்டுசுட்டான்)

மேலதிக தொடர்புகளுக்கு :
இ.பாலகிருஸ்ணன்
பிராந்திய விற்பனை முகாமையாளர்,
செல்சோலார் லங்கா லிமிட்டெக், கொழும்பு - 3, T.P 0777708754

(5752)

# 45 ஆம் நாள் நிகழ்வும் அந்தியேட்டி வீட்டுக்கிருந்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



செல்வி.அகஸ்டின் கனேகா
தாயின்மடியில் 2002-08-14
கடலின் மடியில் 2004-12-26

சுனாமியின் கோர அலை உங்களிருவரையும்
சத்தமில்லாமல் காவு கொண்டதுவோ
எத்தனை கனவுகளுடன் உங்களுடன் வாழ்ந்தோம்
எண்ணங்களை கடல் நீர் அடித்து சென்று -எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தி சென்றதெங்கே..?

இவர்கள் இருவரையும் பிரிந்த வேளையில் பல வழிகளிலும் ஆறுதல். அனுதாபச் செய்திகளை அனுப்பியோர், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத்தெரிவிப்பதோடு 03.03.2005 அன்று புதுக்குடியிருப்பில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அழைக்கின்றோம்.

த.மு: 8ஆம்வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

தகவல்:
பிரிவினால் துயருறும்,
குடும்பத்தினர்.



திருமதி
அகஸ்டின்வரதேஸ்வரி
தாயின்மடியில் 1976-10-30
கடலின் மடியில் 2005-01-18

(5489)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

மண்ணின் மகிழ்வு
1930 ★ 10 ★ 01

மண்ணின் நெகிழ்வு
2005 ★ 01 ★ 28



அமரர்

### திருமதி வைத்திலிங்கம்-வள்ளிப்பிள்ளை

நெஞ்சத்தை விட்டகலா நிலாவே! நித்தம் வணங்கிடும் தெய்வமே.
பஞ்சனைய நெஞ்சம்கொண்ட நித்திலமே! நீள்புலமே
தஞ்சம் எனக் கொண்டிங்கு வாழ்வதற்கு தினம் தயவாகி
வந்திடுவாய்
கஞ்சமகளே காயத்திரியே கை கூப்பி வணங்குகின்றோம் இன்று.

27-02-2005 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அமரர் திருமதி வைத்திலிங்கம் வள்ளிப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டி கிரியைகளில் கலந்துகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு,அன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து மகிழ்ந்து செல்லுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

குடும்பத்தினர்.

இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை.

(5742)

## இலக்கிய நூல்களுக்கான பரிசுத் திட்டம் - 2004

வடக்கு கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட 08 மாவட்டங்களையும் சேர்ந்த எழுத் தாளர்களிடமிருந்து இலக்கிய நூல்களுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. பின்வரும் துறைகளில் போட்டிகள் இடம் பெறும்.

01. நாவல்
02. சிறுகதை.
03. நாடகம்.
04. சிறுவர் இலக்கியம்.
05. கவிதை.
06. இலக்கிய ஆய்வும், விமர்சனமும்.
07. உயர்கல்விக்கான நூல்கள்.

மேற்காட்டப்பட்ட துறைகளைச் சாராத நூல்களையும் போட்டிக்கு அனுப்பிவைக்கவும்.

**போட்டி விதிகள்.**

01.ஒரு எழுத்தாளர் எல்லாப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம்.
02.பங்குபற்றும் எழுத்தாளர் வடக்கு கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட 08 மாவட்டங்களில் ஒன்றைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.
03.நூல்கள் 2004 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் அச்சில் வெளிவந்ததாக இருத்தல் வேண்டும்.
04.போட்டியாளர்கள் ஒவ்வொரு போட்டிக்கு நூல்களை அனுப்பும் போது நான்கு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
05.போட்டிகளில் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

நூல் பிரதிகளை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர்
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
திருகோணமலை.
என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆர்.தியாகலிங்கம்,
செயலாளர்.

(சி.11362)

# பணிநிலை வேண்டுகை

வன்னிப்பகுதியில் இயங்கும் முன்னணி உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. வரவேற்பாளர் - ஆண் :-**
சம்பளம் 7,500.00இற்கு மேல் தகைமைக்கேற்றவாறு வழங்கப்படும்.

**02. பரிமாறுநர் - ஆண் :-**
சம்பளம் 6,000.00இற்கு மேல் தகைமைக்கேற்றவாறு வழங்கப்படும்.

* இரு பணிநிலைக்கும் உணவு, தங்குமிடவசதி இலவசமாக வழங்கப்படும்
* தகைமை :-

பணிநிலை - 01

1. தமிழ்,ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் நன்றாக உரையாடத் தெரிந்தவராக இருத்தல்
2. வாணிபம் பற்றிய வரவேற்பாளர் பயிற்சிநெறியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பணிநிலை- 02

1. பரிமாறுநர் பணியில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரியும் பணியாளருக்கு மூன்றாண்டு நிறைவுற்றதும் இலவசமாக ஓட்டுநர் பயிற்சி வழங்கி ஓட்டுனர் பணிக்கு அமர்த்தப்படுவார்.

○ அகவையெல்லை :-
*வரவேற்பாளர் :- 55 அகவைக்குட்பட்டவர்.*
*பரிமாறுநர் :- 35 அகவைக்குட்பட்டவர்.*

○ பணிநிலைக்கான நேர்முகத்தேர்வு 05. 03. 2005 ஆம் நாள் கிளிநொச்சி அம்மன் கட்டடப்பொருள் வாணிபத்தில் நடைபெறவுள்ளது.

○ தகைமையும், ஆர்வமும், மனவிருப்பும் உடையவர்கள் தன்வரலாறு (சுயவிபரம்) அடங்கிய படிவத்துடன் நேரில் சமுகம் தரவும். (5745)


# அரச உதவிகள் கிடைப்பது மிகவும் அரிது பொது நிறுவனங்களும் எப்போதாவது உதவுகின்றன

## - அம்பாறையில் சுனாமியில் பாதிப்புற்றோர் விசனம்

அரச உதவி எங்களுக்குக் கிடைப்பது மிகவும் குறைவு. பொது நிறுவனங்கள் எப்பொழுதாவது வந்து உதவி செய்வார்கள். அதுவும் சிலருக்குக் கிடைக்கும் சிலருக்குக் கிடைக்காது கர்ப்பிணித் தாய்மாரைப் பொறுத்தவரை அவர்களுக்கு எந்த உதவியும் கிடைப்பதில்லை என அம்பாறை மாவட்டம் கல்முனைப் பிரதேசத்திலுள்ள பாண்டிருப்பு துரௌபதை ஆலய நலன்புரி நிலையத்தில் இருக்கும் சுனாமி கடற் பேரலையால் பாதிப்புக்குள்ளான பெண் ஒருவர் தெரிவித்தார்.

பி.பி.சி. தமிழோசையைச் சேர்ந்த எஸ்.ஆர்.ஜெகதீசன் நேரடியாக இந்த நலன்புரி நிலையத்திற்கு விஜயம்செய்து வழங்கிய பெட்டக நிகழ்ச்சிக்குத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இந்த நலன்புரி நிலையத்தில் தங்களுடைய வாழ்க்கை பற்றி மேலும் குறிப்பிடுகையில், இரண்டுபேர் உள்ள குடும்பம் ஒன்றிற்கு இருபது நாட்கள் தேவைக்காக ஐந்து கிலோ அரிசியும், நானூறு கிராம் பருப்பும், நூறு கிராம் சீனியும் தருவார்கள். இது இருபது நாட்களுக்குப் போதுமா? ஏதோ இருக்கின்ற நகை நட்டுகளை விற்று காலத்தைப் போக்காட்டுகிறோம் என்றார் அந்தப் பெண்.

இதேவேளை கல்முனையில் சுனாமி கடல் பேரலையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் வாழும் இடைத்தரிப்பு முகாமான இஸ்லாமாபாத்தில் இருப்பவர்களின் பிரச்சினைகளில் முக்கியமானதாக அங்குள்ள இட நெருக்கடிபற்றியே மக்கள் கூறுகின்றார்கள். இது தொடர்பாக அவர்கள் கூறுகையில் எழுபத்தியிரண்டு அறைகள் உள்ள இந்த இடைத்தரிப்பு முகாமில் 325 குடும்பங்கள் இருக்கின்றன. ஒரு அறையில் மூன்று நான்கு குடும்பங்கள் இருக்கின்றன. போதிய மலசலகூட வசதிகளும் இல்லையென அங்குள்ள மக்கள் தங்கள் அவலங்களை எடுத்துக் கூறினார்கள்.

# தனியார் பல்கலைக்கழகங்களுக்கு சிறிலங்காவில் அனுமதியில்லை

(கொழும்பு)

இலங்கையின் தனியார் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட மாட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது. அண்மைய நாட்களில் தனியார் பல்கலைக்கழகங்கள் அமைப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் அனுமதி அளித்துள்ளமை தொடர்பில் வெளியாகும் தகவல்கள் ஆதாரமற்றவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சினாலோ அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலோ இது தொடர்பான அனுமதி எவருக்கும் வழங்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


# பயணியர் புதிய பேருந்துப்பணி

**மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள் பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக 01.03.2005ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.**

## நட்டாங்கண்டல் - முகமாலை

| நட்டாங்கண்டல் | பாலையடி | மல்லாவி | வடகாடு | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டு நகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 01-00 | 01-40 | 02.00 | 02.15 | 02.30 | 03.05-03.15 | 03.35 | 03.55 | 04.20 | 04.25 | 04.45 |

## முகமாலை - நட்டாங்கண்டல்

| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | முறிகண்டி | மாங்குளம் | வடகாடு | மல்லாவி | பாலையடி | நட்டாங்கண்டல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை - 08.00 | 08.15 | 08.20 | 08.45 | 09.05 | 09.25-09.45 | 10.20 | 10.35 | 10.50 | 11.10 | 12.00 |

குறிப்பு:-
நட்டாங்கண்டலிலிருந்து பகல் 1.00 தொடங்கி மறுநாள் காலை 8.00 மணிக்கு முகமாலையிலிருந்து புறப்படும்.

**முகாமையாளர்,**
**பயணியர் போக்குவரவு ஊர்தி,**
**வழியனுமதிப் பணியகம்.**

# பயணியர் புதிய பேருந்துப்பணி

**மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள் பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக 01.03.2005ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.**

## மல்லாவி - மாங்குளம் - முகமாலை

| மல்லாவி | பாலையடி | கொல்லவிளாங்குளம் | மாங்குளம் | முறிகண்டி | கிளிநொச்சி | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை - 5.15 | 5.40 | 6.00 | 6.25 | 7.00-7.20 | 7.40 | 8.00 | 8.25 | 8.30 | 8.45 |

## முகமாலை - கந்தபுரம் - மல்லாவி


| முகமாலை | புதுக்காட்டுநகர் | இயக்கச்சி | பரந்தன் | கிளிநொச்சி | கந்தபுரம் | அம்பலப்பெருமாள் சந்தி | துணுக்காய் | மல்லாவி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் 1.30 | 1.45 | 1.50 | 2.15 | 2.35 | 3.40 | 3.50 | 5.10 | 5.20 |

**முகாமையாளர்,**
**பயணியர் போக்குவரவு ஊர்தி,**
**வழியனுமதிப் பணியகம்.**

(சி-11364)

# நியூசிலாந்துடனான ஒரு நாள் தொடரை அவுஸ்திரேலிய அணி வென்றது!

## மூன்றாவது போட்டியிலும் அபார வெற்றி



நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி நியூசிலாந்துடனான மூன்றாவது போட்டியையும் வென்றதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை மூன்றுக்குப் பூச்சியம் என்ற கணக்கில் வென்று தொடரைக் கைப்பற்றி விட்டது.


நேற்று ஒக்லண்டில் நடைபெற்ற பகலிரவு ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஐந்து விக்கெட்டுக்களை மட்டுமிழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய அடம் கில்கிறிஸ்ட், சைமன் கட்டிக் இணை 68 பந்துகளில் 62 ஓட்டங்களைப் பெற்றது.

கட்டிக் ஒன்பது பவுண்டரிகளை விளாசினார். அவுஸ் அணி ஒரு கட்டத்தில் அதாவது 29ஆவது ஓவரில் 128 ஓட்டங்களைப் பெற்று ஐந்து விக்கெட்டுக்களை இழந்து பரிதாப நிலையிலிருந்தது. எனினும், மைக்கல் கிளார்க், ஹூசே இருவரும் இணைந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக அதிகரித்தனர். கிளார்க் 71 ஓட்டங்களையும் ஹூசே 65 ஓட்டங்களைப் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பின்னர் 265 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்திலேயே அணித் தலைவர் பிளெமிங்கை ஒரு ஓட்டத்துடன் இழந்தது. அவர் பிரெட்லீயின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். ஆஸ்லே 27 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கஸ்பரோவிச்சின் பந்து வீச்சில் கில்கிறிஸ்ரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவ்வணியின் மார்ஷல் சகோதரர்கள் இருவரும் ரன் அவுட் முறையில் (55, 14) ஆட்டமிழந்தனர்.

அவுஸ்திரேலியா சார்பில் பிரெட் கொக் மூன்று விக்கெட்டுக்களையும் லீ இரண்டு விக்கெட்டுக்களையும், கஸ்பரோவிச், சைமன்ஸ் கட்டிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளர் ஜோன்ரைட் ஓய்வு பெறுகிறார்?



இந்திய கிரிக்கெட் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து விடை பெறுகிறார் ஜோன் ரைட் நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜோன்ரைட் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகப் பொறுப்பு வகிக்கிறார். இவரது பதவிக்காலம் வரும் மே மாதத்துடன் முடிவடைகிறது. அதற்குப் பிறகு, பதவி நீடிப்புப் பெற இவர் விரும்பவில்லை. ஹைதராபாத்தில் அவர் அளித்த பேட்டியொன்றில் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தொடருக்கு நமது வீரர்கள் முழு வீச்சில் தயாராகின்றனர். கடந்த ஆண்டு பாகிஸ்தானில் நமது அணி விளையாடியதை விட, இந்தத் தொடர் அதிக சவாலானதாக இருக்கும். துடுப்பாட்டவீரர்கள் நீண்ட நேரம் களத்தில் நின்று பெரிய ஓட்டம் எடுத்தால் மட்டுமே வெற்றி பெற முடியும். அணியில் யார்,யார் இடம் பெறுவார்கள் என்பதை தேர்வுக்குழுவினர் தான் முடிவு செய்ய முடியும்.

இந்திய அணி பயிற்சியாளராக எனது ஒப்பந்தம் மே மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. அதற்குப் பிறகு பணியில் நீடிப்பது பற்றி நான் இன்னும் முடிவெடுக்கவில்லை. 2007 உலகக் கோப்பைத் தொடர் வரை பயிற்சியளிக்கும் வகையில், புதிய பயிற்சியாளர் இந்திய அணிக்கு நியமிக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். ஆனாலும், இது பற்றி நான் அதிகம் பேச முடியாது. கிரிக்கெட் சபை தான் முடிவெடுக்க முடியும். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜோன்ரைட்.

# தென்னாபிரிக்க அணி சிம்பாப்வேயை வென்றது!

சிம்பாப்வேயுடனான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 165 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் யோகன்ஸ் பேர்க்கில் நடைபெற்ற இப்போட்டியில் முதலாவதாக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஏழு விக்கெட் இழப்பிற்கு 301 ஓட்டங்களைக் குவித்தது. அவ்வணியின் அடம் பச்சர், அணித்தலைவர் ஸ்மித், ஜக்ஸ், றுடோல்ப் ஆகியோர் முறையே 56,50,50 ஓட்டங்களைப் பெற்றனர். மார்க் பௌச்சர் 49 ஓட்டங்களை வேகமாகக் குவித்தார். பலமற்ற சிம்பாப்வே கடைசி ஐந்து ஓவர்களில் 70 ஓட்டங்களைக் கொடுத்தது. எனினும் சிம்பாப்வே சுழல் பந்து வீச்சாளர் உட்சயா 40 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



பதிலுக்கு 302 ஓட்ட வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சிம்பாப்வே தென்னாபிரிக்க பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் 136 ஓட்டங்களுக்கு சகல வீரர்களும் ஆட்டமிழந்தனர். அவ்வணி 55 ஓட்டங்களில் நான்கு விக்கெட்டுக்களை விரைவில் இழந்தது. தென்னாபிரிக்க வீரர் போர்க்கல் ஒரு ஓவரில் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இப் போட்டித் தொடரில் தென்னாபிரிக்கா 1-0 என்ற நிலையில் முன்னிலையில் உள்ளது.




# விளையாட்டு வீரர்கள் ஓய்வு மண்டபம் திறப்பு


விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வு மண்டபம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சினால் ஒரு மில்லியன் ரூபா செலவில் வவுனியா நகர சபை வளாகத்தில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.
ஓய்வு மண்டபப் பெயர்ப்பலகையை வடக்கு- கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார். மண்டபத்தை வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். (10)

# வவுனியா மாவட்ட விளையாட்டு வீரர்கள் கௌரவிப்பு நிகழ்வு

வவுனியா மாவட்டத்திற்கு பெருமை தேடித் தந்த விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் விளையாட்டு வர்ண இரவு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 7.00 மணிக்கு நடைபெற்றது. வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண மற்றும் தேசிய ரீதியான விளையாட்டுப் போட்டிகளில். பங்கு பற்றி வெற்றியீட்டிய வீரர், வீராங்கனைகள் கௌரவிக்கப்பட்டனர்.

வவுனியா அரச செயலகத்தில் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் கலந்து கொண்டார். யாழ். அரச அதிபர் க.கணேஷ், வவுனியா அரசஅதிபர் சி.சண்முகம் வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் வி.விமலராஜன், விடுதலைப்புலிகளின் விளையாட்டுத் துறை இணைப்பாளர் இன்பன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# டாக்கா கிரிக்கெட் போட்டி மைதானம் மாறுகின்றது!



அடுத்த வருடத்திலிருந்து பங்களாதேஷில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளைப் புதிய மைதானத்தில் நடத்த அந்நாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

டாக்காவிலுள்ள பங்கபந்து அரங்கில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகள் புதிய அறிவித்தலின்படி அங்கிருந்து ஆறு மைல் தொலை விலுள்ள மிர்பூரின சிர்-இ-பங்களா மைதானத்தில் நடைபெறும்.
பி.பி.சிக்கு வழங்கிய செவ்வியில் இது பற்றிக் குறிப்பிட்ட பங்களாதேஷ் கிரிக்கெட் சபைப் பேச்சாளர் றிசுதின் அல் மழுன் குறிப்பிடும் போது இந்த அரங்கு தொடர்பாக அந்நாட்டு உதைபந்தாட்ட சம்மேளனத்துடன் நீண்ட நாட்களாக இழுபறி நிலை காணப்பட்டதாகவும் இறுதியில் கிரிக்கெட்சபைஅதனை தாரை வார்த்ததாகவும் தெரிவித்துள்ளார்..

1950 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட பங்க பந்து அரங்கில் பங்களாதேஷ் முதன் முதல் 2000 ஆம் ஆண்டு இந்தியாவுடன் கிரிக்கெட் போட்டியில் பங்கெடுத்தது.

கிரிக்கெட் போட்டிகளை சிர்-இ-பங்களாவுக்கு நகர்த்தியது கால்பந்தாட்ட இரசிகர்களினதும் கிரிக்கெட் சபையினதும் சந்திப்பின் பின்னராகும்.

அந்த மைதானம் 50 ஆயிரம் இருக்கைகளைக் கொண்டிருப்பதாகவும் ஆனால் 2006 ஆம் ஆண்டில் நடைபெறும் அவுஸ்திரேலியாவுடனான போட்டிகளுக்குதாக்குப் பிடிக்குமா என்பது சந்தேகம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரங்கின் இறுதிப் புனரமைப்புப் பணிகள் அடுத்த வருடத்துக்கு முன்பு பூர்த்தியாகும் என்றும், சர்வதேச கிரிக்கெட் சபை புனரமைப்பு தொடர்பாக தனது சிபார்சை அறிவிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இங்கு தங்குமிட வசதிகள், ரசிகர்களுக்கான விடுதி வசதிகள், பாதுகாப்பு என்பன குறைவாக இருப்பதாகவே தெரிவிக்கப்படுகிறது.




சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் செல்சியா வீரர் டியாகோ பந்தை தலையால் முட்டித்தள்ளப் பாய்கிறார். இதை ஆச்சரியத்துடன் பார்க்கிறார் பார்சிலோனா வீரர் ஹெர்னான்டெஸ். இந்தப் போட்டியில் பார்சிலோனா 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

# ஓமந்தை கோட்ட மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள்

வவுனியா வடக்கு கல்வி வலய ஓமந்தை கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதன்படி 15 வயதுப் பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் தவசியாகுளம், கல்மடு பாடசாலைகள் முறையே முதலாம் இரண்டாம் இடங்களையும் 17 வயதுப்பிரிவில் புதுக்குளம், கல்மடு பாடசாலைகள் முதலாம் இரண்டாம் இடங்களையும் பெற்றன. 19 வயதுப்பிரிவில் கல்மடு,புதுக்குளம் பாடசாலைகள் முறையே முதலாமிடத்தையும் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளன.

உதைபந்தாட்ட 17 வயது ஆண்கள் பிரிவில் புதுக்குளம் ம.வி முதலாமிடத்தையும் பூம்புகார் கண்ணகி வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், கரப்பந்து 15,17,19 வயது ஆண்கள் பிரிவில் கல்மடு அ.த.க பாடசாலை முதலாமிடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பெண்கள் பிரிவில் தவசியாகுளம், புதுக்குளம், கல்மடு பாடசாலைகள் முதலாமிடம் பெற்றன.

மென்பந்து கிரிக்கெட்டில் புதுக்குளம் ம.வி 13-19 வயதுப் பிரிவில் முதலாமிடத்தையும், கபடியில் கல்மடு பாடசாலை ஆண்கள் பிரிவும், பெண்கள் பிரிவும் முதலாமிடத்தைப் பெற்றன. எல்லே விளையாட்டில் புதுக்குளம் ம.வி முதலாமிடம் பெற்றது.



**சிந்தனைக்கு**

போர்க்குணம் மிக்க ஒரு புரட்சிகர சமுதாயமாக எமது தேசத்தை உருவாக்கம் செய்ய வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 27-02-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# இ.தொ.கா.வெளியேற்றம்?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும் மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி அரசாங்கத்திற்குமிடையிலான உறவு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த இரண்டு அமைச்சர்கள் பதவி விலகியதுடன் இவ்உறவு முடிவிற்கு வந்துள்ளது.

இவ்உறவில் நெருக்கடி ஏற்பட்டு இ.தொ.கா வெளியேறியதன் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் சிறுபான்மை அரசாகியுள்ளது. அதாவது அறுதிப் பெரும்பான்மை (113 ஆசனங்கள்) அற்ற சிறுபான்மை அரசாங்கமாக (111 ஆசனங்கள்) ஐ.ம.சு.மு. அரசாங்கம் மாறியுள்ளது. இந்நிலையானது அரசாங்கம் கவிழும் அளவிற்கு நிலைமையைக் கொண்டு செல்லப் போவதில்லை என்று துணிந்து கூறமுடியும். ஆனால் சிற்சில தடங்கல்களை மாத்திரமே சில வேளைகளில் மட்டும் விளைவித்தல் கூடும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவுடனான உறவில் நெருக்கடியேற்பட்டு இ.தொ.கா வெளியேறியதொன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில், இவ் இருதரப்பினருக்கும் இடையில் ஏதோ பாரம்பரிய உறவோ அன்றி கொள்கைப்பற்றோ என்று ஒன்றும் இருந்ததில்லை.

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் இ.தொ.காவும்– ஐ.ம.சு முன்னணி என்ற ரீதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி. மற்றும் அதன் கூட்டணிக்கட்சிகளும் ஒன்றை ஒன்று எதிர்த்துப் போட்டியிட்டே பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்டன. இதன் பின்னர் இவர்கள் இருவரும் இணைந்து கொள்வதை எவ்வாறு கொள்கை அடிப்படையிலானது என்று கூறி விடமுடியும்?

ஆனால் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இருதரப்பிற்குமான தேவையின் நிமித்தம் இரு கட்சிகளும் பேச்சுக்களை நடத்தின. அதாவது அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்காக ஐ.ம.சு.முன்னணியும் ஆட்சி அதிகாரத்தில் இடம் பிடித்துக் கொள்வதற்காக இ.தொ.காங்கிரசும் இரகசியப் பேச்சுக்களை நடத்தின. இருதரப்பு இலாபம் கருதியதானதாகவே இது இருந்தது.

பேரங்களின் முடிவில் இ.தொ.கா.உறுப்பினர்களில் ஒருவர் அமைச்சராகவும் மற்றையவர் பிரதி அமைச்சராகவும் பதவி ஏற்க இ.தொ.கா. அரசாங்கத்தில் இடம் பிடித்துக் கொண்டது. ஆயினும் இதுவரை இ.தொ.கா எந்த அரசாங்கத்தில் பங்கேற்பினும் முதலில் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கும் ஆறுமுகம் தொண்டமான் இம்முறை பதவி ஏற்கவில்லை.

இதற்காக ஆறுமுகம் தொண்டமான் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதற்கு விரும்பவில்லை என்பதல்ல இதன் அர்த்தம். ஆறுமுகம் தொண்டமான் கோரிய அமைச்சுப் பதவியை சனாதிபதி சந்திரிகா உடனடியாக வழங்கத்தயாராக இல்லாமல் இருந்ததே காரணமாகும். ஆனால் காலக்கிரமத்தில் கோரிய அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்ற எதிர்பார்க்கையுடன் ஆறுமுகம் தொண்டமான் இருந்தபோதும், அது சாத்தியமாகவில்லை. இந்நிலையிலேயே அரசாங்கத்தை விட்டு வெளியேற இ.தொ.கா தலைமை தீர்மானித்துள்ளதெனலாம்.

ஆனால் ஒன்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அமைச்சுப் பதவி ஒன்றை அதாவது இ.தொ.காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு வழங்குதல் என்பது அவரின் கொள்கைக்கு மாறானதொன்றல்ல. ஏனெனில் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்திலுள்ள சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரைத்தவிர ஏனைய அனைவருமே அமைச்சுப் பதவிகளை வகித்தே வருகின்றார்.

இந்நிலையில் ஆறுமுகம் தொண்டமான் புறக்கணிக்கப்பட்டமைக்கு ஜே.வி.பி. காரணமாக இருக்கலாம் என்பதற்கான வாய்ப்புக்களே அதிகமுண்டு. ஏற்கனவே 35 இற்கும் மேற்பட்ட அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமை தொடர்பாக ஜே.வி.பி. தனது பலமான ஆட்சேபத்தைத் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றது. இந்நிலையில் மீண்டும் ஒரு அமைச்சர் பதவி அதுவும் தமிழர் ஒருவருக்கு வழங்கப்படுவதை அது ஒரு போதும் ஏற்றுக் கொள்ளும் என்பதற்கில்லை,

இந்நிலையில், ஆறுமுகம் தொண்டமானுக்கான அமைச்சுப்பதவி ஒன்றை சனாதிபதி சந்திரிகா ஒதுக்கீடு செய்வதென்பது சிரமம் மிக்கதொன்றே.

இதனை உணர்ந்தே இ.தொ.கா. அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாகத் தீர்மானித்துள்ளது. இ.தொ.கா. அரசாங்கத்திலிருந்து வெளியேறியதினால் மலையகத் தமிழ்மக்களுக்கு பெரும் இழப்பு ஏதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இ.தொ.கா. தலைவர்களுக்குச் சிலவேளைகளில் சில இழப்புக்கள் ஏற்படலாம்.

ஆனால் இ.தொ.கா. அரசாங்கத்தில் இருந்து வெளியேறுமளவிற்குச் சென்றுள்ளமையும், சனாதிபதி சந்திரிகா இ.தொ.காவை அணைத்துச்செல்லமுடியாமல் போனமையும் அண்மைய அரசியலில் முரண்பாடானதொன்றே, இதற்கு ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தில் இனவாத சக்திகளின் ஆதிக்கம் வளர்ச்சிகண்டு விட்டமை காரணமாக இருக்கலாம். இது ஒரு வகையில் சனாதிபதி சந்திரிகாவின் கைக்கு மீறியதொன்றாகக் கூட இருக்கலாம்.

# மட்டு.அம்பாறை நலன் புரிநிலையங்களில் அதிரடிப்படையின் துன்புறுத்தல் அதிகரிப்பு

### -கூட்டமைப்பு பா.உ.ஜெயானந்த மூர்த்தி கண்டனம்

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் வதியும் பெண்களை மற்றும் மக்களை சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் துன்புறுத்துவது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி கடும் கண்டனம தெரிவித்துள்ளார். இவ்வாறான செயல் நாகரிகமற்றது எனத் தெரிவித்திருக்கும் ஜெயானந்த மூர்த்தி அவர்கள் படையினரின் இந்நடவடிக்கை குறித்து உரிய அதிகாரிகள் மற்றும் போர் நிறுத்தக்கண்காணிப் புக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவித்தார். இதேவேளை கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகப்பிரிவிலுள்ள அகதி முகாம்களில் விசேட அதிரடிப் படையினரின் அட்டகாசம் அதிகரித்து வருவதாக பாதிக்கப்பட்ட அகதிகள் கவலை தெரிவித்துள்ளனர். அகதி முகாம்களில் நிர்வாகத்தை நடாத்திக்கொண்டிருக்கும் கிராமஉத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கும் நிர்வாகத்தைச் சரியான முறைகளில் கொண்டு நடத்துவதற்கு விசேட அதிரடிப்படையினர் தடையாக இருந்து பெரும் இடைஞ்சல் ஏற்படுத்திவருவதாக உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். இரவு வேளைகளில் பெண்களை விசாரணை நடத்துவதாகக் கூறி அழைப்பது உட்படப் பல்வேறு சேட்டையில் ஈடுபடுவதாகவும், இது நிர்வாகத்துக்கு பெரும் தடங்கலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# நோர்வே விசேட தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் அம்பாறையில் முஸ்லிம் பிரமுகர்களுடன் சந்திப்பு

நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்ம் நேற்று அம்பாறை மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டார். இவருடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிறஸ்கரும் சென்றிருந்தார். காரைதீவு, சாய்ந்தமருது, கல்முனை ஆகிய பிரதேசங்களிலுள்ள பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்ட பின்பு சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் சமூக,சமய பிரமுகர்களுடனான சந்திப்பொன்றிலும் எரிக் சூல்ஹெய்ம் கலந்து கொண்டார். இந்தச் சந்திப்பில் உரையாற்றிய அவர், சமாதான முன்னெடுப்புகளும், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்கட்டுமானப்பணிகளும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் என்றும், சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மூன்று உடனடித் தேவைகளான, தொழில் வாய்ப்பு, மக்களின் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், மாண வர்களின் கல்வி நிலைமைகளை வழமைக்கு கொண்டு வருதல் ஆகியவற்றை நிறை வேற்றுவதற்கு நோர்வே உதவும் என்றார். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீள்கட்டு மானப்பணிகளை மேற்கொள்ள சிறிலங்கா விடுதலைப்புலிகளை உள்ளடக்கிய கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் எதிர்பார்ப்புக்களிற்கும் இடமளிக்கப்படும் என்றும், சமாதானப் பேச்சுவார் த்தையில் முஸ்லிம்களின் தனித்தரப்பு கோரிக்கையைப் பொறுத்தவரை இதனைப்பற்றி அனுசரணையாளர்களாகிய நாம் முடிவெ டுக்க முடியாது. பேச்சுவார்த்தையுடன் தொடர்புடைய தரப்பினரே தீர்மானிக்கவேண்டும் என்றும் சூல்ஹெய்ம் கூறினார்.

# இல - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் இறுதிக்கட்ட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

### -அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன்கதிர்காமர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த முக்கிய சந்திப்புகளில் கதிர்காமர் கலந்து கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. அடுத்தமாத இறுதியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று தெரியவருகின்றது. இந்த பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமானது தமிழ் மக்களின் நலன்களைப்பாதிக்கும் என்பதால் இதனை மேற்கொள்ள வேண்டாம் என இந்தியக் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.க வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் ம.தி.மு.கப்பொதுச் செயலர் வைகோவை சந்தித்த இந்தியப் பிரதமர் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படமாட்டாது என உறுதியளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

# அவசர காலச்சட்டத்திற்கு எதிராகவே ஐ.தே.க. எதிர்காலத்தில் செயற்படும்

### -ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சி இனிவரும் காலங்களில் அவசரகால சட்டத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ராஜிதசேனாரட்ன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். நேற்று கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் கடந்த காலங்களில் போர்ச் சூழ்நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அவசர காலச்சட்டத்தை ஆதரித்து வந்தது. எனினும் தற்சமயம் அதற்கான அவசியம் ஏதும் இல்லை என்றும் ராஜிதசேனாரட்ண குறிப்பிடடார். (32)

# பெண் ராணுவச் சிப்பாய் மீது பாலியல் வல்லுறவு முயற்சி

### -பேருந்து சாரதியும், நடத்துநரும் கைது

புறக்கோட்டைப்பகுதியில் பெண் இராணுவச் சிப்பாய் ஒருவரை பாலியல் வல்லுறவு கொள்ள முயற்சித்தமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குளிரூட்டப்பட்ட தனியார் கடுகதி பேருந்து ஒன்றின் சாரதியும் நடத்துநருமே கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. பலாலி இராணுவ முகாமில் கடமைபுரியும் இந்தப் பெண் சிப்பாய் சொந்த ஊரான அநுராதபுரத்தில் தனது விடுமுறையைக் கழித்துவிட்டு கொழும்பு திரும்பும்போதே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பாலியல் வல்லுறவு புரிய முனைந்த இருவரையும் கடுமையாக தாக்கியதோடு அவர்களின் காது மற்றும் முகம் போன்ற இடங்களில் கடித்து காயமேற்படுத்திய நிலையில் மற்றவர்களின் உதவியும் இவருக்கு கிடைத்துள்ளதாகவும் இதனை அடுத்து பாலியல் வல்லுறுவு புரிய முனைந்த இருவரையும் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (32)

~புளியங்குளம் பிரதேசத்தில்~

# பி.சு.சேவைகள் பணிமனை

# வைத்தியசாலை திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையும் புளியங்குளம் பிரதேச சுகாதார மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் கேதீஸ்வரன் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

அடுத்து மகப்பேற்று விடுதியினை வடகிழக்கு



சேவையாளர் பணிமனையும் நேற்றுக் காலை 10.00 மணியளவில் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி அங்குரார்ப்பண நிகழ்வில் முதலில் சுகாதார சேவையாளர் பணிமனையினை திறந்து வைக்கும் வைபவம் நடைபெற்றது.

கட்டடத்தினை வடகிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

அதனையடுத்து பிரதேச வைத்தியசாலை கட்டடம் திறந்து வைக்கும் வைபவம் இடம் பெற் றது. வைத்தியசாலை பிரதான கட்டடத்தினை நிகொட் திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் சார்பில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமாரவேற்பிள்ளை நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தலைமையுரையினை அடுத்து வவுனியா மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் உரையாற்றினார். தொடர்ந்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர், ச.கனகரட்னம் ஆகியோர் உரையாற்றினர். சிறப்புரையினை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல் ஆற்றினார்.

(ச,கு)

## வடமராட்சி கிழக்கில் இன்று 30 தற்காலிக வீடுகள் கையளிப்பு

வடமராட்சி கிழக்கில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிக வீடு களைக் கொண்ட குடியிருப் புக்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து வருகின்றது.

அந்த வகையில் 14 குடியிருப் புக்களில் அமையப் பெற்றுள்ள 758 தற்காலிக வீடுகளை எதிர் வரும் மார்ச் மாத முற்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கையளிப் பதற்கான முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு கையளிக்கப் படவுள்ள வீடுகளில் கேவில் பகுதியில் 30 வீடுகளைக் கொண்ட குடியிருப்பு ஒன்று இன்று காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## மட்டு. பெரிய கல்லாறுக் கிராமத்தில் ஜே.வி.பி.யினர் மக்களால் விரட்டியடிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் பெரிய கல் லாறு கிராமத்தில் சுனாமி அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு தற்காலிக இருப் பிடங்களை அமைத்துக்கொடுப்பது என்று கூறிக்கொண்டு சென்ற ஜே.வி.பியினர் மக்களின், எதிர்ப் புக்காரணமாக அங்கிருந்து வெளி யேறினர். நேற்று முன்தினம் இர வோடிரவாக மேல் மாகாண சபை உறுப்பினர் காஞ்சன பீரிஸ் தலை மையில் 50 இற்கும் மேற்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் அங்கு சென்றிருந்தனர்.

நேற்றுக் காலை ஜே.வி.பியின் நிவாரணப்பணி என்ற தலைப்பில் தனியார் காணியொன்றில் பதாகை யொன்று கட்டப்பட்டு சிலர் தற் காலிக இருப்பிடங்களை அமைக் கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டி ருந்தனர்.

இதனை நேற்றுக் காலை அவ தானித்த கிராமத்து மக்கள் அங்கு கூடி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். "உன்னுடைய வீடு எங்களுக்கு தேவை இல்லை", "ஜே.வி.பி.யே வெளியேறு", "சிங் கள மக்களின் நிவாரண உதவி களை ஏற்போம். ஆனால் இன வாதியான உனது உதவி எமக்கு வேண்டாம்" இப்படி பல கோசங் களை எழுப்பினார்கள். இதனை யடுத்து அந்த இடத்திற்கு சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இதனையடுத்து மாலைக்குள் ஜே.வி.பியினர் அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

### சட்டவிரோத...

இதன் போது சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதன் மூலம் கடல் வளங்கள் அழிந்துபோகும் அபா யம் குறித்து இந்தக் கூட் டத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்ட துடன் மீன்பிடித் தொழிலை வரை முறைகளுக்கு அமைய மேற் கொள்வதன் மூலம் கடலில் உள்ள இயற்கை வளங்களைப் பேணிப் பராமரிக்க வேண்டிய அவசியம் குறித்தும் நடவடிக்கை எடுக்கப் பட்டது.

மேலும், சட்டவிரோதமாக மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என இக்கூட்டத்தில் தெரிவித்த கடற் படையின் தளபதி சூசை அவர்கள் இதற்கென விடத்தல்தீவுப் பகுதியில் காவல் நிலையமொன் றும் செயற்படவுள்ளதாகக் கூறி யுள்ளார்.

### வாகரையில்...

திறந்து வைக்கப்படவுள்ளது. காலை 10. 00 மணிக்கு திருமலை வீதி, வாகரை என்னும் இடத்தில் திறந்து வைக்கப்பெறவுள்ளது.

### சனாதிபதியை..

முன்னதாக நாளை திங்கட் கிழமை சனாதிபதி சந்திரிகா ஜேவி..பி. யினரைச் சந்திக்க சம் மதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

### மட்டு....

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், இன்பமும் துன்ப மும், மாறிமாறி வருவது வழமை. அந்த வகையில் இக்கிராம மக்க ளுக்கு ஏற்பட்ட துன்பநிலை யினை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. ஆயினும் இவர்களுக் குரிய முற்று முழுதான சேவை யினை மட்டக்களப்பு தமிழர் புனர் வாழ்வுக் கழகம் வழங்கி வருவது வரவேற்கத்தக்கதெனக் கூறினார்.

### நலன்புரி....

என்பது போன்ற விடயங்களை இந்தச் சந்திப்பின்போது விடு தலைப்புலிகள் விரிவாக எடுத்துக் கூறியுள்ளனர். லெப். கேணல் கௌ சல்யன் படுகொலைச் சம்பவமானது பாரிய யுத்த நிறுத்த மீறலாகும் எனவும், இராணுவ ஒத்துழைப்புடன் இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதெனவும் தெரிவித்த விடுதலைப்புலிகள் மேலும் சமாதானம் நீடிக்க வேண்டும். அது நிலைக்க வேண்டும் என்ற எதிர் பார்ப்புடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தமக்கு இந்தப் படு கொலையானது பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்றும் இந்தச் சந்திப்பின் போது அவரது கவனத்திற்கு கொண்டு வந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தயா மோகன், அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி, தளபதி பிரபா, தளபதி ரமணன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண் டார்கள்.

### இலங்கைக்கான

தனர்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் மூன்று வைத்தியசாலைகளுக்கு மருந்துவகைகள், வைத்திய உபக ரணங்கள் வழங்கல், கட்டடங்கள் என்பவற்றை நிர்மாணித்தல் என்ப வற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பருத்தித்துறை, மந்திகை அரசினர் வைத்தியசாலை, திருகோணமலை ஆதார வைத்தியசாலை, அம்பாந் தோட்டை வைத்தியசாலை என் பவற்றுக்கான முழு நிதியுத விகளையும் இந்திய அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளது எனவும், அதற்காகவே இவ் வைத்தி யசாலைகளை பார்வையிடுமாறு இந்திய அரசு தன்னை அனுப்பி வைத்துள்ளதெனவும், இவ் வைத்தியசாலைகளை நவீனமயப் படுத்தும் முறையிலான திட்ட வரைபை உடனடியாக கைய ளிக்கும் வண்ணம் வைத்திய நிரு வாகத்தினரை நிருபமாராவ் கேட்டுக்கொண்டார். தொடர்ந்தும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் வைத்தியசாலை குறைபாடுகளை நிருபமாராவ் குழுவினருக்குத் தெரி யப்படுத்தியதுடன், வைத்திய சாலை சத்திரசிகிச்சை நிலையத் தினையும் ஏனைய நோயாளர் விடுதிகள், வளாகங்களையும் சுற் றிக் காண்பித்தனர். (கா,28,33)









## சாவு அறிவித்தல்



**இராமச்சந்திரன் வேலாய் (இராசமணி)**

மூங்கிலாறு தெற்கு உடையார்கட்டை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட இராமச்சந்திரன் வேலாய் (இராசமணி) 26-02-2005 சனி (நேற்று) காலமாகிவிட்டார். இவர் மாரிமுத்து, சீதா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், இராமச்சந்திரனின் அன்பு மனைவியும், ரமேஸ் காந்த், ரஜீஸ்கண்ணா (ஈழநாதம்), சாந்தினி, மனோகரி (மாவீரர் அகரவள்ளி), இரஞ்சினி, செல்வரூபன், ரூபன், ஜீவரஞ்சினி, தவரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசரட்ணம், இராசேந்திரம், சரோஜா, கணேஸ் (பெரியரவி), ரவிச்சந்திரன் (ரவி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கணபதிப்பிள்ளை, நேசா, திலகராணி, புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சீதாலெட்சுமி, உமாநிதி, ரவீந்திரன், லெனின் (வள்ளுவன்) ஆகியோரின் மாமியாரும், எரிக்சோன், பவித்திரா, டிலோஜா, சுரேக்காந்த், ரஜீவன், கஜந்தினி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-02-2005 இன்று (ஞாயிறு) 11.00 மணிக்கு மூங்கிலாறு வடக்கில் உள்ள ரஜீஸ்கண்ணாவின் (மகன்) இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தேராவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**ரஜீஸ்** (மகன், ஈழநாதம்)
மூங்கிலாறு,
வடக்கு, மூங்கிலாறு
(சி-11515)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது